பக்கங்கள்: 13

# காலைக்கதிர்
Kalaikathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2050 கார்த்திகை 14 சனிக்கிழமை 30.11.2019 கதிர் 25

**இனி அது ரகசியம் அல்ல!**

நாடாளுமன்றத்தில் இடம்பெற்றுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்களில் பெரும்பாலானோர் எதிர்க்கட்சித் தலைவராக ரணில் விக்கிரமசிங்க இருக்கக் கூடாது, சஜித் பிரேமதாஸவே இருக்க வேண்டும் எனத் தீர்மானித்தால் அது பக்கம் 02

# தமிழரின் அபிலாஷைகளை நிறைவேற்ற 13ஆவது திருத்தத்தை செயற்படுத்துங்கள்

## கோட்டாபய முன்னிலையில் இடித்துரைத்தார் மோடி

புதுடில்லி, நவ. 30

இலங்கையில் தமிழ் மக்களின் சமத்துவம், நீதி, சமாதானம், கௌரவம் ஆகியவை குறித்த அபிலாஷைகளை நிறைவேற்றும் நல்லிணக்க நடைமுறையை புதிய அரசு முன்னெடுக்கும் என்று நான் எதிர் பார்க்கின்றேன். அதில் அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவது மிகவும் அவசியம்.


– இவ்வாறு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார். பக்கம் 03



## எதிர்க்கட்சித் தலைவராக சஜித் ஐ.தே.க. தலைமை இணங்கியது

கொழும்பு, நவ. 30

நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாஸவை எதிர்க்கட்சித் தலைவராக நியமிக்க ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர்கள் இடையே இணக்கம் எட்டப்பட்டுள்ளது. பக்கம் 02



## வடக்கு – கிழக்கு பிரதேசங்களில் சில தினங்களுக்கு கடும் மழை

யாழ்ப்பாணம்,நவ. 30

வட கிழக்குப் பருவப் பெயர்ச்சி மழை கால நிலை உருவாகியுள்ளதால் வடக்கு – கிழக்கில் அடுத்துவரும் சில தினங்களில் 75 தொடக்கம் 150 பக்கம் 03

## இலங்கைச் சிறைகளில் இருக்கும் இந்திய மீனவர்களுக்கு விடுதலை

### கோட்டா வாக்குறுதி; மோடியை இலங்கை வருமாறும் அழைப்பு



புதுடில்லி, நவ. 30

எல்லை தாண்டி மீன் பிடித்தனர் என்ற குற்றச்சாட்டின் கீழ் இலங்கைக் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டு பக்கம் 03

## இந்தியாவுடனான இலங்கை உறவை உயர்நிலைக்குக் கொண்டு செல்வேன்

### ராம் நாத் கோவிந்திடம் கோட்டா உறுதி



புதுடில்லி, நவ. 30

இந்திய – இலங்கை உறவை உயர்மட்டத்துக் கொண்டு செல்ல எனது பதவிக்காலத்தில் நடவடிக்கை பக்கம் 03

## சுவிஸ் தூதரகப் பெண் கடத்தல்: முறைப்பாடு எதுவுமில்லையாம்!

### கைவிரித்தார் பிரதமர் மஹிந்த

கொழும்பு, நவ. 30

சுவிற்சர்லாந்து தூதரகத்தில் பணியாற்றிய பெண் உத்தியோகத்தரைக் கடத்தியதாகத் தெரிவிக்கப்படும் சம்பவத்தை வன்மையாகக் கண்டிக்கின்றோம். இதுபோன்ற சம்பவங்கள் இடம்பெறுவதற்கு பக்கம் 03

## இலங்கை புலனாய்வுத்துறையை மேம்படுத்த இந்தியா 5 கோடி அமெரிக்க டொலர்கள் உதவி

### அபிவிருத்திக்கும் 40 கோடி டொலர் வழங்க முடிவு

புதுடில்லி, நவ. 30

இலங்கையில் உள்ள புலனாய்வு அமைப்புகளின் திறன்களை மேம்படுத்த 5 கோடி அமெரிக்க டொலர்களைக் கடனாக வழங்கிய இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷ நேற்று நன்றி தெரிவித்தார்.

இது தவிர, இலங்கையின் அபிவிருத்திப் பணிகளுக்கு 40 கோடி அமெரிக்க டொலர் கடன் வழங்குவதாகவும் மோடி அறிவித்தார்.

இந்தியாவின் புதுடில்லியில் கூட்டுச் செய்தியாளர் கூட்டத்தில் உரையாற்றிய ஜனாதிபதி கோட்டாபய, இந்த ஆண்டு ஏப்ரல் மாத பக்கம் 02



## பதவி விலகும் முடிவை அறிவித்தார் தேசப்பிரிய



கொழும்பு, நவ. 30

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய பதவி விலகும் தீர்மானத்தை ஜனாதிபதிக்கு அறிவித்துள்ளார் என்று சபாநாயகர் காரியாலயம் தெரிவித்துள்ளது. பக்கம் 03

## முள்ளியவளையில் இருவர் நேற்றுக் கஞ்சாவுடன் கைது!

முல்லைத்தீவு, நவ. 30

முல்லைத்தீவு – முள்ளியவளை 03ஆம் கட்டைப் பகுதியில் நேற்றுக் காலை பெண் உள்ளிட்ட இருவர் ஒரு கிலோ கேரளக் கஞ்சாவுடன் கைது செய்யப் பக்கம் 03

## பாரதப் பிரதமரின் கருத்தை வரவேற்கிறது கூட்டமைப்பு

கொழும்பு, நவ. 30

இலங்கையில் தமிழர் பிரச்சினைத் தீர்வுக்கு அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துமாறு இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி பக்கம் 03

## இடைக்கால அரசிலேயே இப்படி அடக்குமுறையா?

### சீறுகின்றது ஜே.வி.பி.

கொழும்பு, நவ. 30

உறுதியான அரசு ஒன்றை உருவாக்க முன்னர், இடைக்கால அரசிலேயே அச்சுறுத்தல், அடக்குமுறை மற்றும் தான் தோன்றித் பக்கம் 03

## வடக்கில் கண்ணிவெடிகளை அகற்ற கனடா அரசு நிதியுதவி

கொழும்பு, நவ. 30

இலங்கையின் வட பகுதியில் கண்ணிவெடிகளை அகற்றுவதற்கு கனடா 20 லட்சம் டொலர்கள் நிதி உதவி வழங்க உள்ளதாக அறிவித்துள்ளது.

கனேடிய வெளிவிவகார பக்கம் 03

# தமிழர் அரசியல் நிலைமைகள் குறித்து சுமந்திரனிடன் பிரிட்டன் தூதுவர் பேச்சு



கொழும்பு, நவ. 30

ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் தமிழர் தரப்பு அரசியல் நிலைமைகள் மற்றும் எதிர்காலச் செயற்பாடுகள் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ . சுமந்திரனிடம் கேட்டறிந்துகொண்டார் இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் சரா ஹுல்ரன் அம்மையார்.

தூதரகத்தில் நடந்த இந்தச் சந்திப்பில் தற்போதைய அரசியல் நிலைவரங்கள் குறித்து விரிவாகப் பேசப்பட்டன. (ஐ)

# புதிய அரசு வந்து சில தினங்களிலேயே வடக்கில் இராணுவத்தின் கெடுபிடிகள்

## தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கம் குற்றச்சாட்டு

(எஸ்.நிதர்ஷன்)

புதிய அரசு வந்து சில நாள்களிலேயே வடக்கில் இராணுவத்தினரின் சோதனைகள் கெடுபிடிகள் அதிகரித்துள்ளன எனத் தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் திட்ட இணைப்பாளர் அன்ரனி ஜேசுதாசன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் நல்லூரில் அமைந்துள்ள யாழ். பாடி விருந்தினர் விடுதியில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இலங்கையின் புதிய ஜனாதிபதியாக முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய தெரிவு செய்யப்பட்டுள்ளார். அவரது அரசு உருவாகி சில நாட்கள்தான் ஆகின்றன. இவ்வாறான நிலையில் நான் வடக்கின் சில பகுதிகளுக்குச் சென்றபோது அங்கு புதிதாக இராணுவத்தின் சோதனைச் சாவடிகள் முளைத்துள்ளன. இராணுவத்தினரின் சோதனைகள் கெடுபிடிகள் மீண்டும் ஆரம்பித்துள்ளன. இவற்றை நான் நேரடியாகவே காணக்கூடியதாக இருந்தது.

கடற்தொழிலாளர்களின் பிரச்சினைகள் தொடர்பில் இந்த அரசிலாவது தீர்வுகள் கிடைக்கும் என நம்புகின்றோம்.கடந்த அரசில் பல பிரச்சினைகளை நாம் சுட்டிக் காட்டியபோதும் மீனவர்களின் பிரச்சினைகளுக்கு இன்றுவரை உரிய தீர்வுகள் வழங்கப்படவில்லை. குறிப்பாகச் சட்ட விரோத மீன்பிடிகள்,எல்லைதாண்டிய மீன்பிடிகள் போன்றன தீர்க்கப்படவில்லை.

மேலும் கடற்தொழிலாளர்களில் பலர் இன்றும் முகாம்களில் வாழ்ந்து வருகின்றனர். குறிப்பாக வடக்கில் 16 நலன்புரி முகாம்கள் உள்ளன. அவர்கள் வீடுகள் வாழ்வாதாரம் இன்றிப் போராடி வருகின்றனர். புதிய அரசிலாவது அவர்களுக்கு தீர்வு கிடைக்க வேண்டும்.

புதிய அரசில் வடக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் அமைச்சர் இந்த கடற்தொழில் அமைச்சைப் பொறுப்பேற்றுள்ளார். அவர் எமது பிரச்சினைகளை நன்கு அறிந்தவர் என்பதால் தீர்வுகளைப் பெற்றுத் தருவார் என நம்புகின்றேன். கோட்டாபயவின் அரசு பொறுப்பேற்றுள்ள சில நாள்களிலேயே இராணுவச் சோதனைகளும் கெடுபிடிகளும் அதிகரித்துள்ளன.

இவ்வாறான நிலையில் இந்த அரசு ஊடாக எமது மக்களின் வாழ்க்கைக்குச் சுமுகமான நிலை உருவாகுமா?அல்லது பாதகமான நிலை மாறுமா? என்பதைப் பொறுத்திருந்து பார்க்க வேண்டும் – என்றார். (ஐ–07)

# வட மாகாண மீனவர்கள் குறித்து கோட்டாவிடம் 21 கோரிக்கைகள்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், நவ. 30

புதிதாக உருவாகியுள்ள கோட்டாபாயவின் அரசிடம் வடக்கு மாகாண மீனவர்களின் பிரச்சினைகள் தொடர்பில் தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கமும்,வடக்கு மாகாணக் கடற்தொழிலாளர் இணையமும் இணைந்து 21 கோரிக்கைகளை முன்வைத்துள்ளன.

யாழ்ப்பாணம் நல்லூரில் அமைந்துள்ள யாழ். பாடி விருந்தினர் விடுதியில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இந்தக் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

இதனை மிக விரைவில் கடற்தொழில் அமைச்சரைச் சந்தித்து நேரடியாகக் கையளிக்கவுள்ளனர் என மீனவர் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

வடக்கு மாகாண மீனவர்கள் போர் முடிவடைந்து பல வருடங்கள் ஆகின்ற போதிலும் இன்று வரை பல இன்னல்களை எதிர்நோக்கி வருகின்றனர். அதிலும் குறிப்பாக போரால் இடம்பெயர்ந்து வாழும் மக்களின் பூர்வீகக் காணிகள் மற்றும் மீன்பிடி இறங்குதுறைகள் முழுமையாக கையளிக்கப்படாமல் உள்ளன.

எனவே அவற்றை விடுவித்து மீனவ மக்கள் தங்கள் தொழிலை சுதந்திரமாக மேற்கொள்ள வழிவகை செய்யவேண்டும்.மேலும் வடக்கில் பெண்களைத் தலைமையாகக் கொண்ட குடும்பங்கள் பல உள்ளன. அவர்கள் மீது விசேட கவனம் செலுத்தவேண்டும். எல்லை தாண்டும் மீனவர்களை கட்டுப்படுத்துதல், சட்ட விரோத முறைகளை பயன்படுத்தி தொழிலில் ஈடுபடுபவர்களுக்கு நடவடிக்கை எடுத்தல் போன்ற முக்கிய கோரிக்கைகள் இதில் முன்வைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு முன்வைக்கப்பட்டுள்ள 21 அம்ச கோரிக்கைகளை புதிதாக பதவியேற்றுள்ள கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்து கையளிக்கவுள்ளதாகவும் இவற்றை நிறைவேற்றி தருமாறு கோரவுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர். (ஐ–07)

# முகநூலில் பிரபாகரன் படம் வெளியிட்டவர் கைதானார்!

கொழும்பு, நவ. 30

களுத்துறை – ஹொரண பிரதேசத்தில், தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் படத்தை முகநூலில் வெளியிட்ட ஒருவரைப் பொலிஸார் நேற்று முன் தினம் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இளைஞரிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த ஹொரண பொலிஸார் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். (ஐ)

## எதிர்க்கட்சித்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் சஜித் பிரேமதாஸவையும் சந்தித்த ஐக்கிய தேசிய முன்னணியின் பங்காளிக் கட்சித் தலைவர்கள் இந்த இணக்கத்தை எட்டியுள்ளனர் என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியின் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் பதவியைத் துறந்த சஜித் பிரேமதாஸ, கட்சியுடனான தொடர்புகளற்று இருந்தார்.

எனினும் சஜித் பிரேமதாஸவை எதிர்க்கட்சித் தலைவராக நியமிக்க வேண்டும் என்று ஐக்கிய தேசிய முன்னணியின் பங்காளிக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இணைந்து சபாநாயகரிடம் கோரியிருந்தனர்.

இந்த நிலையில் ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர் என்ற அடிப்படையில் ரணில் விக்கிரமசிங்கவுடனும் சஜித் பிரேமதாஸவுடனும் பங்காளிக் கட்சித் தலைவர்களான மனோ கணேசன், ரவூக் ஹக்கீம், ரிஷாத் பதியூதீன் உள்ளிட்டோர் முன்னெடுத்திருந்தனர்.

இந்த முயற்சியின் பயணமாக எதிர்க்கட்சித் தலைவராக சஜித் பிரேமதாஸவை நியமிக்க ரணில் விக்கிரமசிங்க இணக்கம் தெரிவித்துள்ளார். (ஐ)

## இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனுபவத்திலிருந்து, தேசிய பாதுகாப்பு உத்திகளை நாங்கள் மறுபரிசீலனை செய்யவேண்டியிருந்தது. இது தொடர்பாக இந்தியாவில் இருந்து வரும் உதவி மிகவும் பாராட்டத்தக்கது. பிரதமர் மோடியின் உத்தரவாதங்கள் மிகவும் ஊக்கமளிக்கின்றன என்றார். (ஐ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பற்றி பேசி ஒரு முடிவுக்கு வரத் தயார் என்று ரணில் விக்கிரமசிங்க தரப்புத் தெரிவித்திருக்கின்றது.

கட்சியின் யாப்புக்கு முரண்படாமல் விடயத்தைத் தீர்ப்பதற்கு ரணில் விக்கிரமசிங்க விரும்புகின்றார் எனக் கூறப்படுகின்றது.

கடைசியாக நடைபெற்ற கட்சியின் சம்மேளனத்தில் 2024 வரை கட்சியின் தலைவராக ரணில் விக்கிரமசிங்கவே இருப்பார் என்று தீர்மானிக்கப்பட்டிருப்பது தெரிந்ததே.

தவிரவும், கட்சியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினராக இருப்பாராயின் அவரே கட்சியின் நாடாளுமன்றக் குழுவின் தலைவராகவும் இருக்க வேண்டும் எனக் கட்சி யாப்புத் தெரிவிக்கின்றது.

இப்போது கட்சியின் தலைவர் ரணில்தான். அவர் எம்.பியாக இருக்கின்றமையால் கட்சியின் நாடாளுமன்றக் குழுவின் தலைவராக அவரே இருக்க முடியும். கட்சியின் நாடாளுமன்றக் குழுவின் தலைவர் அவர் என்றால், அந்தக் கட்சிக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவி வழங்கப்பட்டால் அதைப் பெற வேண்டியவரும் அவரே.

ஆனால், கட்சியின் எம்.பிக்களில் அதிகமானோர் சஜித் பிரேமதாஸவே எதிர்க்கட்சித் தலைவராக வேண்டும் என்று விரும்பினால், கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவராக சஜித் இருக்க வேண்டும்.

எனவே, எதிர்க்கட்சித் தலைவர் பதவியை சஜித் பிரேமதாஸவுக்கு வழங்குவதாயின், ஒன்றில், ரணில் நாடாளுமன்ற உறுப்புரிமையைத் துறந்து ஐ.தே.க. நாடாளுமன்றக் குழுவில் இடம் பெறாமல் தம்மைத் தவிர்க்க வேண்டும். இல்லையேல் கட்சித் தலைவர் பதவியையும் துறந்து சஜித் பிரேமதாஸவுக்கு அதனையும், எதிர்க்கட்சித் தலைவர் பதவியையும் சேர்த்து அவர் வழங்க வேண்டும்.

எதைச் செய்வதற்கும் ரணில் விக்கிரமசிங்க தயார். கட்சியின் பிரதான தரப்புக்கள் மற்றும் தலைவர்களுடன் இது குறித்துப் பேசி முடிவெடுக்க ரணில் விரும்புகின்றார் என்று கூறப்படுகின்றது.

இதையொட்டி நேற்று சபாநாயகரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் சபாநாயகர் கருஜயசூரிய, ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாஸ ஆகியோர் சந்தித்து பேசினர் எனத் தெரியவந்தது. கட்சித் தலைவராக கருஜயசூரியவும் எதிர்க்கட்சித் தலைவராக சஜித் பிரேமதாஸவும் செயற்படுவது குறித்து நேற்று ஆராயப்பட்டதாகத் தெரியவந்தது. ஓரிரு தினங்களில் திட்டவட்டமான முடிவு வெளியாகும் என எதிர்பார்க்கலாம்.

போகின்ற போக்கில் சுமார் 45 வருட நீட்சி கொண்ட ரணிலின் அரசியல் சகாப்தம் முடிவை நெருங்கிக் கொண்டிருக்கின்றதோ என்ற சந்தேகம்தான் எனக்குத் தோன்றுகின்றது.

பாவம், சிறுபான்மையினரான தமிழர்களோடு பரிவாக இருந்த ஒரே காரணத்தால் பெரும்பன்மையினரான பௌத்த, சிங்களவர்களினால் புறமொதுக்கப்பட்ட ஒருவராக ரணிலின் அரசியல் சரித்திரம் முடிவுறுகின்றமை மனமகிழ்வுக்கு உரியதல்ல.

★ ★ ★

சுவிஸ் தூதரகத்தின் விஸா பிரிவில் பணியாற்றும் தமிழ் பெண் அதிகாரி ஒருவர் வெள்ளை வானில் கடத்தப்பட்டு, அச்சுறுத்தி விடுவிக்கப்பட்ட சம்பவம் தென்னிலங்கையிலும், சர்வதேச மட்டங்களிலும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கின்றது.

ஆனால் அந்தச் சம்பவம் குறித்து இன்னும் முறைப்படியான முறைப்பாடு ஏதும் பொலிஸாருக்கு வழங்கப்படாமையால், இந்தச் சம்பவம் குறித்து ஒழுங்கு முறையான விசாரணை ஒன்றை ஆரம்பிக்கவோ, குற்றவாளிகளை மடக்கவோ முடியாமல் இருக்கின்றது என சம்பந்தப்பட்ட விசாரணைத் தரப்புகள் தெரிவிக்கின்றன.

வெள்ளைவானில் கடத்தப்பட்டவர் எனக் கூறப்படும் இலங்கைப் பெண்மணியைப் புலனாய்வாளர்களின் கண்முன்னால் காட்டாமல் சுவிஸ் தூதரகம் ஒளித்துப்பிடித்து விளையாடுவதாக ஒரு தகவல் தெரிவிக்கப்பட்டது.

பாதிக்கப்பட்ட பெண்ணை பொலிஸ் விசாரணை மற்றும் முறைப்பாடு பதிவு ஆகியவற்றுக்கு பொலிஸாரிடம் முன்னிலைப்படுத்தாதவரை, இந்தக் கடத்தல் சம்பவம் தொடர்பான குற்றவாளிகளை மடக்குவது சாத்தியமற்றது என இலங்கை அரசுத் தரப்பு கூறுகின்றது.

அதிலும் ஒரு நியாயம் இருப்பதாகவே எனக்குப்படுகின்றது.

அந்தத் தமிழ் பெண் அதிகாரியை முறைப்பாடு பதிதல் மற்றும் பொலிஸ் விசாரணைக்கு ஒத்துழைக்கும்படி சுவிஸ் தூதரகம் தூண்டினால் மட்டுமே இந்த விடயத்தில் குற்றவாளிகளை மடக்கும் 'Break through' ஏதும் கிடைக்கும் என நான் நம்புகின்றேன்.

நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள் வாசகர்களே...?

- மின்னல் -

## தமிழரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் நேற்று மேற்கொண்ட பேச்சின் பின்னர் நடத்திய இணைச்செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இலங்கையின் ஜனாதிபதியான பின்னர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எமது அழைப்பையேற்று இந்தியாவுக்கு முதல் வெளிநாட்டுப் பயணம் மேற்கொண்டு வந்தமையையிட்டு நாங்கள் மகிழ்ச்சியடைகின்றோம். அவருக்கு ஒட்டுமொத்த இந்திய மக்களின் சார்பாக வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இந்தியா இலங்கையின் மிகவும் நெருக்கமான நண்பன். இன்று நாங்கள் இரு நாட்டின் பாதுகாப்புக் குறித்து கலந்துரையாடினோம்.

உயிர்த்த ஞாயிறு தினமன்று இலங்கை மீது நடத்தப்பட்ட தாக்குதலை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இந்தியா எப்போதும் பயங்கரவாதத்தை எதிர்க்கின்றது. பயங்கரவாதத்துக்கு எதிரான செயற்பாடுகளுக்காக இந்தியா 5 கோடி அமெரிக்க டொலர்களை இலங்கைக்குக் கடனாக வழங்கவுள்ளது.

மேலும், இலங்கையின் உட்கட்டமைப்பு மற்றும் பொருளாதார அபிவிருத்திக்காக 40 கோடி அமெரிக்க டொலர்களையும் கடனாக இந்தியா வழங்கவுள்ளது.

இந்திய வீட்டுத்திட்டத்தின் கீழ் வடக்கு, கிழக்கில் 46 ஆயிரம் வீடுகளைக் கட்டியுள்ளோம். மேலும் 14 ஆயிரம் வீடுகள் மலையக மக்களுக்காகக் கட்டப்பட்டு வருகின்றன. சூரிய சக்தி மூலம் மின்சாரத்தைப் பெற்றுக்கொள்ளும் திட்டங்களுக்கு 10 கோடி அமெரிக்க டொலர் கடன் இலங்கைக்கு இந்தியாவால் வழங்கப்படும்.

இலங்கையின் வடக்கு–கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்தி, இந்திய வம்சாவழித் தமிழர் பகுதி அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு போன்றவற்றுக்கான இந்தியாவின் உதவிகள் தொடரும்.

இலங்கையில் நல்லிணக்கம் குறித்த எங்கள் கருத்துக்களை இன்று பரிமாறிக்கொண்டோம். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, இன நல்லிணக்கம் குறித்த தனது அரசியல் கண்ணோட்டத்தைப் பற்றி என்னிடம் கூறினார். நல்லிணக்க நடைமுறையில் அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவதும் அடங்கும். அது மிகவும் அவசியம்.

இலங்கையில் தமிழ் மக்களின் சமத்துவம், நீதி, சமாதானம், கௌரவம் ஆகியவை குறித்த அபிலாஷைகளை நிறைவேற்றும் நல்லிணக்க நடைமுறையை புதிய அரசு முன்னெடுக்கும் என்று நான் எதிர்பார்க்கின்றேன்.

நாங்கள் அயல்நாடுகளுக்கு முன்னுரிமை என்ற கொள்கையைப் பின்பற்றுகின்றோம். அந்த வகையில், ஸ்திரமான மற்றும் வளமான, முன்னேற்றகரமான இலங்கை இந்தியாவின் நலனுக்கு மிகவும் உகந்த விடயம். இது முழு இந்து சமுத்திரத்துக்கும் நன்மையளிக்கக்கூடிய விடயமாகும் – என்றார். (ஐ)

## பதவி விலகும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தனது பதவி விலகல் கடிதத்தை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அனுப்பி வைத்துள்ளமையுடன் சபாநாயகர் கரு ஜெயசூரியவுக்கும் கடிதம் அனுப்பி வைத்துள்ளார்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்துள்ள சபாநாயகர் கரு ஜயசூரிய, பதவியிலிருந்து சுயமாக விலகிச்செல்லாது, தனது சேவைக் காலம் முடியும் வரை இருந்து, மக்களுக்கான சேவையைச் செய்யுமாறு, மஹிந்த தேசப்பிரியவிடம் கோரியுள்ளார். (ஐ)

## இலங்கைச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறைவைக்கப்பட்டுள்ள அனைத்து இந்திய மீனவர்களையும் விடுவிப்பேன். அத்துடன், அவர்களின் படகுகளும் விடுவிக்கப்படும்.

– இவ்வாறு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி முன்னிலையில் வாக்குறுதியளித்தார் இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ.

நேற்று நண்பகல் ஹைதராபாத் மாளிகையில் இடம்பெற்ற இரு நாட்டு அரச தலைவர்களுக்கும் இடையிலான சந்திப்பின் பின்னர் இடம்பெற்ற இணை செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இரு நாடுகளுக்கும் இடையே காணப்படும் நீண்டகால நட்புறவு, பொருளாதாரம், அரசியல் மற்றும் சமூக தொடர்புகளை முன்னோக்கி கொண்டு செல்வது தொடர்பில் நாம் இருவரும் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டோம். மேலும், இரு நாடுகளினதும் பாதுகாப்புக்கு முன்னுரிமையளித்துச் செயற்படுதல் தொடர்பிலும் நீண்ட கலந்துரையாடலில் ஈடுபட்டோம். இரு நாடுகளும் பொருளாதார ரீதியில் நெருங்கிய ஒத்துழைப்புடன் செயற்படுவது தொடர்பாகவும் விசேட கவனம் செலுத்தினோம்.

நீண்டகாலப் பிரச்சினையாகக் காணப்படும் இந்திய – இலங்கை மீனவர் பிரச்சினைகள் தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

எல்லைதாண்டி மீன்பிடித்தனர் என்ற குற்றச்சாட்டின் கீழ் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு சிறை வைக்கப்பட்டுள்ள அனைத்து இந்திய மீனவர்களையும் விடுவிப்பேன் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகின்றேன். அத்துடன், அந்த மீனவர்களின் படகுகளும் விடுவிக்கப்படும்.

இந்தியாவுக்கான அரச முறை பயணத்தை மேற்கொள்ளுமாறு எனக்கு வழங்கப்பட்ட அழைப்புக்கு இந்தியப் பிரதமருக்கும் இந்திய மக்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இந்தியப் பிரதமரையும் இலங்கைக்கு வருகை தருமாறு அழைப்பு விடுக்கின்றேன் – என்றார்.

இதனைத் தொடர்ந்து இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியால் வழங்கப்பட்ட விருந்துபசாரத்தில் கலந்துகொண்ட இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, ஹைதராபாத் மாளிகையிலுள்ள விசேட அதிதிகளின் குறிப்பேட்டிலும் நினைவுக் குறிப்பொன்றைப் பதிவு செய்தார். (ஐ)

## முள்ளியவளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுள்ளனர்.

வடமராட்சி கிழக்கு ஆழியவளையைச் சேர்ந்த 28 வயதுடை பெண் ஒருவரும் 39 வயதுடைய ஆண் ஒருவருமே கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடம் விசாரணைகளை மேற்கொண்டு வரும் முள்ளியவளைப் பொலிஸார் அவர்கள் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ)

## இந்தியவுடனான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எடுக்கப்படும்.

– இவ்வாறு இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

இந்தியாவுக்கான இரண்டு நாள் அரசமுறைப் பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் இந்திய ஜனாதிபதி ராம் நாத் கோவிந்துக்கும் இடையிலான உத்தியோகபூர்வ சந்திப்பு நேற்று முற்பகல் இடம்பெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ஜனாதிபதியாக பொறுப்பேற்றுக்கொண்டதன் பின்னர் தனது முதலாவது அரசமுறை வெளிநாட்டுப் பயணமாக இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ள இலங்கை ஜனாதிபதியை வரவேற்கும் நிகழ்வு ராஷ்டிரபதி பவனில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதன்போது இந்தியாவுக்கு வருகைதரும் வெளிநாட்டு அரச தலைவர்களுக்கு இந்திய அரசால் வழங்கப்படும் இராணுவ அணிவகுப்பு மரியாதையுடன் கோட்டாபயவுக்கு மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது. இதில் இந்திய ஜனாதிபதி ராம் நாத் கோவிந்த், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி ஆகியோர் இணைந்து கோட்டாபயவை வரவேற்றனர்.

இதனைத் தொடர்ந்து இரு நாட்டு ஜனாதிபதிகளுக்கும் இடையிலான சந்திப்பு இடம்பெற்றது.

இலங்கையின் புதிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு வாழ்த்துத் தெரிவித்த இந்திய ஜனாதிபதி ராம் நாத் கோவிந்த், இந்தச் சந்திப்பு இரு நாடுகளுக்கும் இடையிலான உறவை மேலும் பலப்படுத்தும் முக்கியமானதொரு சந்திப்பாகும் எனத் தெரிவித்தார்.

புதிய இலக்குடன் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களைப் பாராட்டிய இந்திய ஜனாதிபதி, இதற்கு தமது நாடு பூரண ஒத்துழைப்பை வழங்கும் எனவும் குறிப்பிட்டார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த கோட்டாபய, இந்திய – இலங்கை உறவை உயர்மட்டத்துக் கொண்டு செல்ல தனது பதவிக்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதியளித்தார்.

இந்தச் சந்திப்பில் இந்திய வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்சங்கர், இந்தியப் பொதுப் போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சர் கலாநிதி வீ.கே. சிங் மற்றும் இலங்கைத் தூதுக்குழுவினர் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

அதனைத் தொடர்ந்து ராஜ்காட் சென்ற கோட்டாபய, மகாத்மா காந்தி நினைவிடத்தில் அஞ்சலி செலுத்தினார். விசேட அதிதிகளுக்கான குறிப்பேட்டிலும் அவர் இதன்போது கையெழுத்திட்டார். (ஐ)

## வடக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் பிரான்கோயிஸ் பிலிப்பீ சம்பெகென் நேற்று இந்த உதவித் திட்டம் பற்றி அறிவித்துள்ளார்.

இலங்கை உள்ளிட்ட உலகின் அறுபது நாடுகளில் வெடிக்காத கண்ணிவெடிகள் காணப்படுவதனால் மக்கள் அந்தப் பகுகளில் குடியேற முடியாத நிலைமை நீடித்து வருவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நிலக்கண்ணி வெடிப்புக்களினால் ஆண்டுதோறும் ஏழாயிரம் பேர் மரணிப்பதுடன் பல்லாயிரக் கணக்கானவர்கள் காயமடைகின்றனர். நிலக்கண்ணி வெடி அகழ்வு உள்ளிட்ட சகல செயற்பாடுகளிலும் பால்நிலை சமத்துவம் பேணப்பட வேண்டியது மிகவும் அவசியமானது என கனேடிய அரசு தெரிவித்துள்ளது. (ஐ)

## இடைக்கால...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தனமாகச் செயற்படும் அரசு உறுதியான ஆட்சி ஒன்றை உருவாக்கிக் கொண்டால் நிலைமை என்னவாகும் என ராஜபக்ஷாக்களை ஆதரித்த மக்களே சிந்தித்துப் பாருங்கள் என ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துநெத்தி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஊடகவியலாளர்களை அச்சுறுத்தல் கலாசாரம் மீண்டும் தலைதூக்கிவிட்டது. தேர்தலுக்கு முன்னர் இருந்தே நாம் இந்த காரணிகள் குறித்து அதிகமாகவே தெளிவுபடுத்தியுள்ளோம். தொடர்ச்சியாக மக்களுக்கு கூறினோம், இன்று அது நடக்க ஆரம்பித்துவிட்டது.

இப்போது உருவாகும் இந்தச் சூழல் மிகவும் மோசமான நிலையில் முடியும். தமக்கு எதிராக எழும் குரல்களுக்கு முகங்கொடுக்க முடியாத நிலையில் குறித்த நபர்களை அச்சுறுத்தி, சாட்சியங்களை திரிபுபடுத்தி நீதிமன்றத்தின் மீது அழுத்தம் பிரயோகித்து குற்றவாளிகள் தப்பிக்கும் நடவடிக்கையே யாகும்.

பலகுற்றங்கள் குறித்து ஆராய ஆரம்பித்த நபர்கள் மீதான அச்சுறுத்தல் காரணமாக முக்கிய அதிகாரிகள் நாட்டை விட்டு வெளியேறவேண்டிய நிலை உருவாகியுள்ளது.

மத்திய வங்கி ஊழலில் குற்றவாளிகள் எனக் கூறிவந்த ரணில் விக்கிரமசிங்க, ரவிகருணாநாயக்க ஆகியோர் சுதந்திரமாக இன்னமும் நடமாடுகின்றனர். இவர்களைக் காப்பாற்றுகின்றோம் என எம்மையும் விமர்சித்தவர்கள் ஆட்சிக்கு வந்ததும் ஏன் ரணில், ரவி ஆகியோருக்கு எதிராக விசாரணைகளை நடத்தவில்லை. ஆனால் விசாரணைகளை நடத்திய அதிகாரிகளை நாட்டை விட்டு வெளியேற்றும் நடவடிக்கையை எடுக்கின்றனர்.

இன்று கள்ளர்களுக்கு பயந்து பொலிஸார் நாட்டைவிட்டு வெளியேறும் நிலைமை உருவாகியுள்ளது.

அரசு அவ்வப்போது என்ன நினைக்கின்றதோ அதைச் செய்கின்றனர். இது நகைப்புக்குரிய விடயமாகும். அமைச்சரவை நியமனங்களைப் பார்த்தாலும், மூன்று மாதகால குறுகிய காலத்தில் அளவுக்கு அதிகமான நியமனங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

முதல்நாள் இரவு பிரதியமைச்சர்களாக இருந்தவர்கள் அடுத்த நாள் காலையில் இராஜாங்க அமைச்சர்களாக மாறியுள்ளனர். இடைக்கால அமைச்சரவையிலேயே இந்த நிலைமை என்றால் ஆட்சியை கையில் எடுத்தால் நிலைமைகள் என்னவாகும்? மக்களிடமே நாம் இந்த கேள்வியை கேட்கிறோம். மக்கள்தான் இதனை விளங்கிக்கொள்ள வேண்டும் – என்றார். (ஐ)

## பாராதப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வலியுறுத்தியதை முழுமையாக வரவேற்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் கருத்துவெளியிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன், தமிழரின் அரசியல் தீர்வு விடயத்தில் இது புதிய நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

13 ஆவது திருத்தத்துக்கு அப்பாலும் சென்று தீர்வைத்தர இருப்பதாக முன்னைய காலங்களில் ராஜபக்ஷ ஆட்சியின்போது குறிப்பிடப்பட்டது. அந்த வாக்குறுதியையும் அவர்கள் நிறைவேற்ற வேண்டுமென நாம் விரும்புகிறோம் என்றும் குறிப்பிட்டார் சுமந்திரன் எம்.பி. (ஐ)

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி ஏற்படும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

நாடுமுழுவதும் கடந்த 27ஆம் திகதி முதல் வடகிழக்கு பருவப் பெயர்ச்சி மழை உருவாகியுள்ளது. இதனால் நாட்டின் வடக்கு, கிழக்கு, வடமத்திய, மத்திய, சப்ரகமுவ, தென் மற்றும் ஊவா மாகாணங்களில் அவ்வப்போது மழை பெய்து வருகிறது.

இந்த நிலையில் அடுத்து வரும் நாள்களில் இந்த மாகாணங்களில் 75 தொடக்கம் 150 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி ஏற்படும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

மழை மற்றும் வெள்ளப் பெருக்கு காரணமாக ஏற்படும் இயற்கை இடர்களிலிருந்து பாதுகாப்பாக இருக்க முன்னேற்பாடுகளுடன் இருக்குமாறு இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் கேட்டுள்ளது. (ஐ)

## சுவிஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடமளிக்க முடியாது. பாதிக்கப்பட்ட பெண் இதுவரை வாக்குமூலம் அளிக்காமல் இருப்பதால் விசாரணைகளை தொடரமுடியாமல் இருக்கின்றது

– இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

நீர்வழங்கல் மற்றும் வசதிகள் இராஜாங்க அமைச்சராக நியமனம்பெற்ற அமைச்சர் வாசுதேவ நானயக்கார நேற்று பத்தரமுல்லையில் அமைந்துள்ள நீர் வழங்கல் அமைச்சில் பதவியை ஏற்றுக்கொண்டார்.

இந்த நிகழ்வில் கலந்துகொண்ட பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் ஊடகவியாலாளர்களால் கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

சுவிற்சர்லாந்து தூதரகத்தில் கடமையாற்றும் பெண் உத்தியோகத்தரை கடத்திய சம்பவம் தொடர்பாக இறுதியாக நேற்று முன் தினம் இரவு எனக்குக் கிடைத்த தகவலின் பிரகாரம் அவர் பொலிஸில் இதுவரை எந்த வாக்குமூலமும் வழங்கியதில்லை.

வாக்குமூலம் வழங்காவிட்டாலும் விசாரணையைத் தொடந்து மேற்கொள்ளுமாறு தெரிவித்திருக்கின்றேன். அந்த இடத்தில் இருக்கும் சி.சி.ரி.வி. கமராக்களைப் பொலிஸார் சோதித்துள்ளனர்.

அத்துடன் இது தொடர்பாக விசாரணைகளைக் கொண்டு செல்ல எமக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு சுவிற்சர்லாந்து தூதுவரை சந்தித்தபோது நான் அவரிடம் கேட்டுக்கொண்டேன்.

ஏனெனில் முறைப்பாடு எதுவும் இன்றி விசாரணைகளை மேற்கொள்ள முடியாது. என்றாலும் நேற்று முன்தினம் வரை சம்பந்தப்பட்ட பெண் வாக்குமூலம் வழங்கி இருக்கவில்லை. இந்த விடயத்தில் நாங்கள் இரண்டு பக்கத்துக்கும் இறுகி இருக்கின்றோம்.

ஏனெனில் உண்மையாகவே இவ்வாறானதொரு சம்பவம் இடம்பெற்றுள்ளதா என்பதை நாங்கள் உறுதிப்படுத்திக்கொள்ளவேண்டும்.

அதற்கு சம்பந்தப்பட்டவர்கள் இதுவரை எந்த முறைப்பாடும் தெரிவிக்கவில்லை. இருந்தபோதும் இந்தச் சம்பவத்தை நாங்கள் வன்மையாகக் கண்டித்துள்ளோம்.

இவ்வாறானதொரு சம்பவம் இடம்பெற்றிருந்தால் அதனை நாங்கள் கண்டிக்கின்றோம். இவ்வாறான சம்பவங்களுக்கு கொழும்புக்குள்ளோ நாட்டுக்குள்ளோ இடமளிக்க முடியாது – என்றார். (ஐ)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online


## செய்யுமா தேர்தல் ஆணையம்?

நீதி நிலைநாட்டப்படுவது மட்டுமின்றி, நிலை நாட்டப்படுவது போல காட்டப்படவும் வேண்டும். – என்ற ஒரு முதுமொழி நம் மத்தியில் உண்டு.

நீதி நிலைநாட்டப்படுவது போலக் காட்டப்பட்டால்தான் மக்களுக்கு நீதித் துறையின் மீது நம்பிக்கை – ஈடுபாடு – வரும் என்பது இதன் உட்பொருள்.

இந்த எதிர்பார்ப்பு வெறுமனே நீதி மற்றும் சட்டத்துறைக்கு மட்டும் உரியதன்று. நியாயத்தை எதிர்பார்க்கும் அனைத்துத் துறைகளுக்கும் இது பொதுவான விடயம்.

மக்கள் தமது இறைமையைப் பிரயோகிக்கும் தேர்தல் விடயங்களுக்கும் இது பொருத்தமானதுதான்.

இலங்கையில் தேர்தல்கள் நீதி, நியாயமாக நடத்தப்படுவது மட்டுமல்லாமல், நடத்தப்படுவதாகக் காட்டப்படவும் வேண்டும் என்பதைச் சம்பந்தப்பட்ட தரப்பினருக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழுவைப் பொறுத்தவரை தொழில்சார் ரீதியில், நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தல், முன்னைய அனைத்துத் தேர்தல்களையும் விட மேம்பட்ட நிலையில் ஒப்பேற்றி முடிக்கப்பட்டிருக்கின்றது என அது திருப்திப்படலாம்.

தேர்தல் வன்முறைகள் மிக மிகக் குறைவு. தேர்தல் குளறுபடிகள் இல்லை என்று சொல்லாம். ஆள்மாறாட்டம், தில்லுமுல்லுகள், அராஜகங்கள் அடியோடு இல்லை எனலாம்.

எனினும் தேர்தல் பிரசாரத்தை ஒட்டி நடந்த ஊடக அராஜகங்கள், தேர்தலின் சம்பந்தப்பட்ட தரப்புகள் நேரடியாக எல்லை மீறி செலவிட்ட பணம் போன்ற இன்னோரன்ன காரணங்களினால் நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலின் தர நிர்ணயம் கீழிறங்கி விட்டது என்பது சர்வதேசக் கண்காணிப்பு – அவதானிப்பு – அமைப்புகளின் கண்டுபிடிப்பாகும்.

அது முற்றிலும் சரியான கணிப்பீடுதான். தேர்தல் செலவினம், முறையற்ற பிரசாரங்கள், பிரசார நடவடிக்கைகளில் அராஜகங்கள் பேன்றவற்றைக் கட்டுப்படுத்தி, ஒழுங்குபடுத்தி, நெறிப்படுத்தும் நிலையிலோ, அதிகாரத்திலோ சுயாதீன தேர்தல் ஆணைக்குழு இல்லை என்பதும் வாஸ்தவம்தான்.

இவற்றில் பல விடயங்கள் தேர்தல் ஆணையத்தினால் தனித்து முன்னெடுத்துக் கட்டுப்படுத்த முடியதாதவை என்பதும் உண்மைதான்.

இவ்விடயங்களைக் கையாள்வதற்கு சுயாதீனத் தேர்தல் ஆணையத்துக்கு மேலதிக அதிகாரங்கள், சட்ட வசதிகள் செய்யப்பட வேண்டும். நீதிமன்றத்துடன் சேர்ந்து அது இயங்க வேண்டிய நிலைகைள் கூட உருவாக்கப்பட வேண்டி இருக்கலாம்.

எனினும், இவற்றைத் தாண்டி சில விடயங்கள் இன்னும் தேர்தல் ஆணையத்தின் வரம்புக்குள் உள்ளன. அவையும் சீர் செய்யப்பட வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம். தனக்கு இப்போதுள்ள அதிகாரங்களை வைத்துக் கொண்டே இந்த விவகாரங்களை இன்னும் கனகச்சிதமாகத் தேர்தல் ஆணையம் கையாள முடியும் எனக் கருதுகிறோம்.

இனி நடைபெறவிருக்கும் பொதுத்தேர்தலுக்கான ஏற்பாடுகள் குறித்து ஆராய்வதற்காகப் பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகளுடனான கலந்துரையாடல் ஒன்றை எதிர்வரும் புதன் கிழமை தேர்தல் ஆணையம் முன்னெடுக்கவிருக்கின்றது.

இந்தச் சமயத்தில் பொதுத் தேர்தல் தொடர்பான ஒரு முக்கிய குறைபாட்டைச் சுட்டிக் காட்ட விரும்புகின்றோம்.

நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் பல தசாப்த காலமாக இந்த நாட்டில் நடைமுறையில் உள்ள விகிதாசாரப் பிரதிநிதித்துவத் தேர்தல் முறைமையின் கீழேயே வரவிருக்கும் பொதுத் தேர்தலும் நடைபெறவிருக்கின்றது. அது தவிர்க்க முடியாத ஒன்று.

இந்தத் தேர்தல் முறையில் விருப்பு வாக்குகள் எண்ணப்படுவது தவிர்க்க முடியாத ஒரு கட்டாயமாகும். ஆனால், அதனை வெளிப்படையாக, எல்லோருக்கும் திருப்தி தரத்தக்க வகையில், தேர்தல் ஆணையம் முன்னெப்பது இல்லை என்பது பெரும் குற்றச்சாட்டாகும். எப்போதுமே அது ஒரு மூடு மந்திரமாகவே நடத்தப்படுவதுதான் சிக்கல்.

ஒரு கட்சிக்கு விழுந்த வாக்குகளின் விருப்பு வாக்கு எண்ணிக்கை அந்தக் கட்சியின் கவனிப்புக்கு மட்டும் உரியது என்ற தவறான அணுகுமுறையில் – கோட்பாட்டில் – தேர்தல் ஆணையம் செயற்படுவதுதான் இந்தப் பிரச்சினைக்குப் பிரதான காரணமாகும்.

தேர்தலில் மக்கள் அளித்த வாக்குகளின் அடிப்படையில் சரியான பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படுவதை அறிவிக்கும் தேர்தல் ஆணையத்திக் கடமை, பொறுப்பு என்பது அது – அதாவது தேர்தல் ஆணையம், இந்த நாட்டு மக்களுடன் (அதாவது வாக்காளர்களுடன்) செய்து கொண்ட ஒப்பந்தமாகும்.

ஆகவே, அந்தப் பணியைத் தான் சரியாகத்தான் செய்கின்றது என்பதை மக்களுக்கு வெளிப்படையாகக் காட்ட வேண்டிய கடப்பாடு தனக்கு உண்டு என்பதைத் தேர்தல் ஆணையம் மறந்து விடக் கூடாது.

எனவே, பொதுத் தேர்தலில் விருப்பு வாக்கு எண்ணிக்கை என்பது அக் கட்சியின் முகவர்கள் சிலரின் முகதாவில் – முன்னிலையில் – நடந்தால் போதுமானது என்ற குறுகிய கொள்கைக் கோட்பாட்டுக்கு வெளியே வந்து, வாக்காளர்கள் அனைவருக்கும் திருப்தியளிக்கக் கூடிய வகையில் வெளிப்படைத் தன்மையுடன் அது முன்னெடுக்கப்பட வேண்டும் என்ற போக்கில் அதனை அணுகத் தேர்தல் ஆணையம் முன்வர வேண்டும்.

அந்தப் போக்கில் அதற்கான விதி முறைகள் நடைமுறைச் சாத்தியமான வகையில் ஒழுங்குபடுத்தப்பட வேண்டும்.

அப்போதுதான் விருப்பு வாக்கை எண்ணும் நடவடிக்கை நீதியாக நடப்பது மட்டுமின்றி, நீதியாக நடக்கின்றது என்ற மனப்பதிவும் சாதாரண வாக்களருக்கு வரும்!

செய்யுமா தேர்தல் ஆணையம்?

# கோட்டாபயவை வரவேற்று தமிழில் டுவிட் செய்த மோடி




புதுடில்லி, நவ. 30

இலங்கை – இந்திய வரலாற்று சிறப்புமிக்க உறவுகளுக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் விஜயம் ஒரு சான்று என இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியாக கோட்டாபய பதவியேற்றுக் கொண்ட பின்னர் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் அழைப்பை ஏற்று நேற்று முன்தினம் இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டிருந்தார்.

நேற்றுக் குடியரசு தலைவர் ராம்நாத் கோவிந்தைச் சந்தித்த கோட்டாபய பின்னர் ராஷ்டிரபதி பவனில் பிரதமர் மோடியுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

இந்த சந்திப்பு குறித்து டுவிட்டரில் தமிழில் பதிவிட்ட மோடி, இலங்கை ஜனாதிபதியாக முதலாவது உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு வருகை தந்த கோட்டாபய ராஜபக்ஷ அவர்களை வரவேற்பதில் மகிழ்வடைகின்றேன்.

இலங்கை – இந்திய வரலாற்று சிறப்புமிக்க உறவுகளுக்கு இந்த விஜயம் ஒரு சான்றாகும், அதேநேரம் எமது பிணைப்பை வலுப்படுத்தவும், நல்லுறவை பலமூட்டவும் இது உதவும் என பதிவிட்டுள்ளார். (ஐ)

# ராஷ்ட்ரபதி பவனில் கோட்டாவுக்கு நேற்று மகத்தான வரவேற்பு நிகழ்வு









புதுடில்லி, நவ. 30

இந்தியாவுக்கு விஜயமொன்றை மேற்கொண்டுள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு இந்திய ஜனாதிபதி மாளிகையான ராஷ்ட்ரபதி பவனில் மகத்தான வரவேற்பு வழங்கப்பட்டது.

இந்திய ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த், பிரதமர் நரேந்திர மோடி ஆகியோர் ஜனாதிபதி கோட்டாபயவை வரவேற்றனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய ஜனாதிபதி கோட்டபாய -

இருநாட்டு உறவு மேலும் வலுப்பட வேண்டும் என்பதே என் விருப்பம் - பாதுகாப்பு, பொருளாதார வளர்ச்சியில் இந்தியாவுடன் ஒருங்கிணைந்து செயல்படுவோம்.- என்று குறிப்பிட்டார். (ஐ)


## யாழ். சமூக செயற்பாட்டு மையம்

JSAC

பெண்களுக்கெதிரான வன்முறை ஒழிப்பு வாரம்
(காரத்திகை 25 முதல் மார்கழி 10 வரை)

சமூகத்திலிருக்கும் பால்நிலை பாரபட்சங்களை களைவதனூடாக அவர்களை சமூகஇ பொருளாதார, அரசியல் ரீதியாக வலுப்படுத்துவோம்.

16
2019





### நாளை

01.12.2019
ஞாயிற்றுக்கிழமை

நட்சத்திரம்: பஞ்சமி மு.இ. 09.21 வரை
திதி : உத்தராடம் பி.ப. 12.11 வரை
இராகுகாலம் : 04.44 – 06.14
சுப நேரம் : 09.14 – 10.44

# சிங்களவர்களுக்குச் சமமான உரிமையுடன் தமிழரும் வாழ கோட்டாவிடம் வலியுறுத்துக!

## ஜி.கே.வாசன் மோடியிடம் கோரிக்கை



சென்னை, நவ. 30

இலங்கை வாழ் தமிழர்கள் நலன் காக்கப்படவேண்டும் என இலங்கை ஜனாதிபதியிடம் இந்திய பிரதமர் வலியுறுத்த வேண்டும் என, தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் ஜி.கே. வாசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ஜி.கே.வாசன் நேற்று வெளியிட்ட அறிக்கையில்–

இந்தியாவுக்கு வருகை புரிந்துள்ள இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் இந்தியப் பிரதமர் இலங்கையில் வாழும் சிங்களவர்களுக்கு உள்ளது போல தமிழர்களுக்கும் மற்ற சிறுபான்மை மக்களுக்கும் ஒரே மாதிரியான சலுகைகள், உரிமைகள், பாதுகாப்புகள் கிடைக்கவேண்டும் என்பதை குறிப்பிட்டுக் கூறவேண்டும்.

இந்தியாவும் இலங்கையும் அண்டை நாடுகள் மட்டுமல்ல, சகோதரத்துவத்துடன் பழகும் நாடுகள். எனவே இந்திய பிரதமர் இலங்கை ஜனாதிபதியிடம் பேசும் போது இலங்கையில் உள்ள ஈழத்தமிழர்கள் வாழும் சில பகுதியில் உள்ள ராணுவத்தை உடனடியாக விலக்கிக்கொள்ள வலியுறுத்த வேண்டும்.

மேலும் சிங்களவர்களும் தமிழர்களும் மற்ற சிறுபான்மை மக்களும் ஒற்றுமையாக வாழக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும். இலங்கை அரசு இலங்கையில் உள்ள அனைத்துத் தரப்பு மக்களுக்கும் திட்டங்களை வகுத்து திட்டங்களின் பயன் அனைவருக்கும் சமமாகச் சென்றடைய வேண்டும். ஈழத்தமிழர்கள் வாழும் பகுதிகளில் பாதுகாப்பை பலப்படுத்த வேண்டும்.

ஈழத்தமிழர்களிடம் இருந்து பறிக்கப்பட்ட நிலங்களை அவர்களிடம் மீண்டும் ஒப்படைக்க வேண்டும். இலங்கையில் கடந்த காலங்களில் ஈழத்தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் இனிமேலும் நிகழாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். இலங்கை சிறையில் வாடும் தமிழர்களை விடுதலை செய்ய வேண்டும்.

ஈழத்தமிழர்களின் குடும்பங்கள் நிம்மதியாக, சுதந்திரமாக வாழக்கூடிய நிலையை ஏற்படுத்த வேண்டும். ஈழத்தமிழர்களுக்கு 13 ஆவது அரசியல் சட்டத்திருத்தத்தின்படியும், கூடுதலாகவும் அரசியல் அதிகாரங்கள் முழுமையாகக் கிடைக்க வேண்டும். இலங்கைக் கடற்படையால் தமிழக மீனவர்களுக்கு இனிமேலும் பாதிப்புகள் ஏற்படாமல் இருக்க வேண்டும். இலங்கை கடற்படையால் பறிமுதல் செய்யப்பட்ட தமிழக மீனவர்களின் விசைப்படகுகளை ஒப்படைக்கவோ அல்லது படகுகளுக்கு உரிய இழப்பீட்டையோ வழங்க வேண்டும்.

கச்சதீவுப்பகுதியில் மீன்பிடிப்பதற்கு தடை ஏதும் இல்லாத நிலையை ஏற்படுத்த வேண்டும். இரு நாட்டு மீனவர்களும் மீன்பிடித் தொழில் செய்யும் போது பிரச்சினைகள் ஏற்படாமல் இருக்க மீனவர்களிடையே ஒத்த கருத்தை ஏற்படுத்த வேண்டும். இது போன்ற கோரிக்கைகளை பிரதமர் இலங்கை ஜனாதிபதியிடம் வைத்து தமிழ் மக்களுக்கு பாதுகாப்பு அரணாக விளங்க வேண்டும்.

அதாவது இலங்கையில் பெரும்பான்மையாக இருக்கின்ற சிங்களர்களும் சிறுபான்மையாக இருக்கின்ற தமிழர்கள் உள்ளிட்ட மற்ற சமுதாயத்தினரும் ஒற்றுமையாக, ஏற்றத்தாழ்வில்லாமல், அமைதியாக வாழக்கூடிய சூழலை ஏற்படுத்த வேண்டிய கடமை இலங்கை அரசுக்கு இருக்கிறது என்பதால் இந்தியப் பிரதமர் இலங்கை ஜனாதிபதியிடம் இலங்கை வாழ் தமிழர்கள் நலன் காக்கப்பட வேண்டும் என்பதற்காக உறுதியோடு பேசவேண்டும் – என்று கூறியுள்ளார். (ஐ)

# மின்தடை

யாழ்ப்பாணம், நவ.30

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று சனிக்கிழமை மதியம் 12.00 மணியிலிருந்து 2.00 மணி வரை –

**யாழ் பிரதேசத்தில் -**

பிறவுண் வீதி, அரசடி வீதி, புகையிரத கடவையிலிருந்து தட்டாதெருச் சந்தி வரை, கே.கே.எஸ் வீதி, நாச்சிமார் கோவிலிலிருந்து சிவன் கோவில் வரை, நாவலர் வீதியில் ஐந்து சந்தியிலிருந்து இலுப்பையடிச் சந்தி வரை, கஸ்தூரியார் வீதியில் அரசடி வீதிச் சந்தியிருந்து ஸ்ரான்லி வீதிச் சந்தி வரை, மானிப்பாய் வீதியில் ஓட்டுமடம் சந்தியிலிருந்து கே.கே.எஸ் வீதி வரை, அசாத் வீதி, பி.ஏ.தம்பி லேன், பிரப்பங்குளம் வீதி, பொன்னப்பா வீதி, சிவலிங்கப்புளியடி, கன்னாதிட்டி, மணிக்கூட்டு வீதி, சிவன் பண்ணை வீதி, காதி அபூபக்கர் வீதி, ஹரிகரன் அச்சகம் பிறைவேற் லிமிரெட், அண்ணாமலையான் சிறி இராகவேந்திரா என்ரர்பிறைசஸ் பிறைவேற் லிமிரெட், வியாபார அபிவிருத்தி முகாமையாளர் பி.எல் .சி, ஆஸ்பத்திரி வீதி வேம்படி சந்தியிலிருந்து சத்திர சந்தி வரை, கந்தப்பசேகரம் வீதி, மகாத்மா காந்தி வீதி, முனீஸ்வரன் வீதி, கஸ்தூரியார் வீதி ஆஸ்பத்திரி வீதி சந்தியிலிருந்து வின்சர் சந்தி வரை, மின்சார நிலைய வீதி, பெரியகடை வீதி, யாழ் கொமர்சல் வங்கி, யாழ் தேசிய சேமிப்பு வங்கி, யாழ் இலங்கை வங்கி, ரில்கோ விடுதி, சுகாதார திணைக்களம், கார்கில்ஸ் பூட் சிற்றி, யாழ் வைத்தியசாலை மூன்று மாடிக்கட்டடத் தொகுதி, அபி கட்டடம், யாழ் விடுதி, பல்கலைக்கழக தங்கு விடுதி, தலங்காவில், திருநெல்வேலி, பரமேஸ்வராச் சந்தி, சிவன் அம்மன் வீதி, கந்தர்மடம், அன்னசத்திரச் சந்தி, இலுப்பையடிச் சந்தி, பருத்தித்துறை வீதியில் நாக விகாரையில் இருந்து பாரதியார் சிலை வரை, விக்ரோறியார் வீதி, மின்சார நிலைய வீதியில் ஒரு பகுதி, புகையிரத நிலையப் பிரதேசம், மார்ட்டின் வீதி, யாழ் 2ஆம், 3ஆம், 4ஆம் குறுக்குத் தெருக்கள், ஸ்ரான்லி வீதியில் புகையிரதக் கடவையிலிருந்து இராசாவின் தோட்ட வீதி வரை, அம்பலவாணர் வீதி, அன்னசத்திர வீதி, ஆஸ்பத்திரி வீதி, வேம்படி சந்தியிலிருந்து மார்ட்டின் வீதி வரை, ஸ்ரான்லி வீதியில் ஆரியகுளத்திலிருந்து முட்டாசுக்கடை சந்தி வரை, கஸ்தூரியார் வீதியில் ஒரு பகுதி, மணிக்கூட்டு வீதியில் ஒரு பகுதி, நொதேர்ண் சென்றல் கொஸ்பிற்றல், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆண்கள் விடுதி, டம்றோ – பலாலி வீதி, ஹற்றன் நஷனல் வங்கியின் பிராந்திய அலுவலகம், பீப்பிள் லீசிங் அன் பினான்ஸ் கம்பனி ஸ்ரான்லி வீதி, AVNOR பிறைவேற் லிமிற்ரெட், மக்கள் வங்கி ஸ்ரான்லி வீதி, யாழ் புகையிரத நிலையம், Green Grass விடுதி, சிறிநதியா நகை மாளிகை, Raja Talkies, LOLC ஞானம்ஸ் விடுதி, ரொப்பாஸ், இராமநாதன் வீதி, அரசடி வீதி, வைமன் வீதி, கோவில் வீதி, ஆஸ்பத்திரி வீதி, மார்ட்டின் வீதி சந்தியிலிருந்து A9 வீதி வரை, நல்லூர் கோவிலடி, றக்கா வீதி, மருதடி வீதி, சுண்டிக்குளி, பஸ்ரியன் சந்தியிலிருந்து பாரதி வீதி சந்தி வரை, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, யாழ் பல்கலைக்கழக விஞ்ஞான பீடம், ஆளுநர் தங்கும் விடுதி, ஆளுநர் செயலாளர் அலுவலகம், யாழ் மாவட்டச் செயலாளர் அலுவலகம், பெனிசுலா புறப்பர்ட்டி டெவலப்பர்ஸ் பிறைவேற் லிமிற்ரெட் (துளசி மகால்), யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இயற்கை விஞ்ஞான பீடம், றக்கா வீதி பிறிட்டிஸ் கவுன்ஸில், நாவலர் வீதி, தியாகி அறக்கொடை நிலையம், US ஹோட்டல், பிரதிப் பொது முகாமையாளர் அலுவலகம், (இ.மி.ச.) ஆகிய இடங்களிலும் பிரதேசங்களிலும், – மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

# கட்டுநாயக்க விமானத் தளத்தை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை



கொழும்பு, நவ. 30

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை மேம்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு கண்காணிப்பு விஜயம் ஒன்றை மேற்கொண்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும்போதே அமைச்சர் பிரசன்ன ரணதுங்க இந்த விடயத்தைத் தெரிவித்தார்.

இந்த நடவடிக்கைகளை விரைவில் நிறைவு செய்து பயணிகளுக்கு உடனடியாகச் சேவையை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், சுற்றுலாப்பயணிகளைக் கவர்வதற்குரிய சிறப்பு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன எனவும் அவர் கூறினார். (ஐ)

# இணைய ஊடக ஆசிரியரிடம் சி.ஐ.டியினர் தீவிர விசாரணை

கொழும்பு, நவ. 30

Voiceetube.lk என்ற இணைய ஆசிரியர் துாரா விதான, குற்றவியல் விசாரணைத் திணைக்களத்தின் தலைமையகமான 4 ஆம் மாடிக்கு சைபர் குற்றப் பிரிவால் நேற்றுமுன்தினம் அழைக்கப்பட்டு நீண்டநேரம் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

சிங்கள சார்பு அமைப்பு அளித்த புகாரைத் தொடர்ந்து, theleader.lk என்ற இணையதளத்தில் வெளியிடப்பட்ட ஒரு கட்டுரை குறித்து சி.ஐ.டி. அவரிடம் ஓர் அறிக்கையைப் பெற்றதாகக் கூறப்படுகிறது.

பல மணி நேரம் நீடித்த விசாரணைக்குப் பின்னர் ஒரு அறிக்கையை வழங்கிய பின்னர் அவர் நேற்று முன்தினம் மாலை சி.ஐ.டி. வளாகத்திலிருந்து வெளியேறினார்.

துஷாரா முன்னாள் நிதி அமைச்சராக இருந்த மங்கள சமரவீரவின் பணியாளர்களில் ஓர் ஊடக அதிகாரியாகவும், பணியாற்றினார். மேலும் theleader.lk இன் செய்தி வெளியீட்டிலும் ஈடுபட்டார். (ஐ)

# பொலிஸ் பேச்சாளர் பதவி இனி இல்லை

*கொழும்பு, நவ. 30*

*பொலிஸ் பேச்சாளர் பதவியை ரத்துச் செய்ய தேசிய பொலிஸ் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.*

*பொலிஸ் பேச்சாளராகப் பதவி வகித்த சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் ருவன் குணசேகர ,பொலிஸ் சட்டப் பிரிவின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.* *(ஐ)*

SRI MURUGAN
COMMUNICATION & AGENCY POST OFFICE
WesternUnion WU
மூலமாக அனுப்பப்படும் பணத்தினை பாதுகாப்பாக எம்மிடம் பெற்று பயணப் பையினை பரிசாக வெல்லுங்கள்
உலகெங்குமிருந்து உறவுகளிடமிருந்து அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள
உறவுகளுக்கு தபால்கள் பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ்; அதிவிரைவு பாதுகாப்பு நம்பகத் தன்மை
No.303, K.K.S. Road, Jaffna. Srilanka.Tel: 021 222 2670/5392 Fax: 021 222 3214
Email: srimurugan09@gmail.com srimurugan303@gmail.com

# மே.வங்க இடைத்தேர்தல் மம்தா அணிக்கு வெற்றி!



கொல்கத்தா,நவ.30

சட்டசபைக்கு நடந்த இடைத்தேர்தலில் மேற்கு வங்காளத்தில் 3 தொகுதிகளிலும் மம்தா கட்சி வெற்றி பெற்றது. உத்தரகாண்டில் தேர்தல் நடந்த ஒரே தொகுதியை பாரதீய ஜனதா தக்க வைத்தது.

மேற்கு வங்காள சட்டசபையில் 3 தொகுதிகளுக்கு கடந்த 25 ஆம் திகதி இடைத்தேர்தல் நடந்தது. இந்த 3 தொகுதிகளிலும் மாநிலத்தை ஆளும் மம்தா பானர்ஜியின் திரிணாமுல் காங்கிரஸ் கட்சி வெற்றி பெற்றுள்ளது.

கலியாகஞ்ச் தொகுதியில் திரிணாமுல் காங்கிரஸ் வேட்பாளர் தாபன்தேவ் சிங்கா தனக்கு அடுத்த படியாக வந்த பாரதீய ஜனதா வேட்பாளர் கமல்சந்திர சர்காரை 2,414 வாக்குகள் வித்தியாசத்தில் வீழ்த்தி வெற்றி பெற்றார்.

கரக்பூர் சதாரில் திரிணாமுல் காங்கிரஸ் வேட்பாளர் பிரதீப் சர்கார், தன்னை எதிர்த்து போட்டியிட்ட பாரதீய ஜனதா வேட்பாளர் பிரேம் சந்திர ஜாவை 20 ஆயிரத்து 853 வாக்கு வித்தியாசத்தில் வென்றார். இந்தத் தொகுதி ஏற்கனவே பாரதீய ஜனதா மாநில தலைவர் திலீப் கோஷ் வெற்றி பெற்றிருந்த தொகுதி ஆகும். அவர் மக்களவை தேர்தலில் வெற்றி பெற்றமையால் இங்கு இடைத்தேர்தல் நடந்தது.

கரீம்பூர் தொகுதியில் திரிணாமுல் காங்கிரஸ் வேட்பாளர் பீமலேந்து சின்காராய், தனக்கு அடுத்த படியாக வந்த பாரதீய ஜனதா வேட்பாளர் ஜெய்பிரகாஷ் மஜூம்தாரை 23 ஆயிரத்து 910 வாக்கு வித்தியாசத்தில் தோற்கடித்தார்.

இந்த வெற்றி மக்களின் வெற்றி என்று மம்தா பானர்ஜி கருத்து தெரிவித்தார். மேலும், பாரதீய ஜனதாவின் அராஜகத்தை மக்கள் நிராகரித்து உள்ளனர் என்றும் குறிப்பிட்டார்.

இந்த வெற்றியை மக்களுக்கு அர்ப்பணிக்கிறோம். இது மதச்சார்பின்மை, ஒற்றுமைக்கானது. தேசிய குடிமக்கள் பதிவேட்டுக்கு எதிரானது. பாரதீய ஜனதாவின் அதிகார அராஜகத்துக்கு கிடைத்த பதிலடி எனவும் அவர் கூறினார்.

உத்தரகாண்ட் மாநிலம், பித்தோரகார் சட்டசபை தொகுதிக்கு நடந்த இடைத்தேர்தலில், பாரதீய ஜனதா வேட்பாளர் சந்திரபந்த், தன்னை எதிர்த்து களம் கண்ட காங்கிரஸ் வேட்பாளர் அஞ்சு லுந்தியை 3,267 வாக்குகள் வித்தியாசத்தில் வீழ்த்தினார்.

இதன் மூலம் இந்த தொகுதியை பாரதீய ஜனதா தக்க வைத்துக்கொண்டுள்ளது.

# மராட்டியத்தில் புதிய அரசின் வழிகாட்டி சரத் பவார்தானாம்



'மகாராஷ்டிரா வளர்ச்சி முன்னணி' உருவாக்கிய புதிய கூட்டணி அரசின் வழிகாட்டி சரத்பவார் என சிவ சேனா புகழாரம் சூட்டி உள்ளது.

சிவசேனா தலைவர் உத்தவ் தாக்கரே நேற்று முன்தினம் மாலை மகாராஷ்டிரா மாநில முதலமைச்சராகப் பதவி ஏற்றார்.

முன்னதாக நேற்று முன்தினம் தனது 'சாம்னா' நாளிதழின் தலையங்கத்தில் 'சிவசேனா, தேசியவாத காங்கிரஸ், காங்கிரஸைச் சேர்ந்த மகாராஷ்டிரா வளர்ச்சி முன்னணி கூட்டணி அரசின் 'வழிகாட்டி' சரத்பவார்' என சிவசேனா புகழாரம் சூட்டி உள்ளது.

தேசியவாத காங்கிரஸ் தலைவர் சரத்பவார், கடந்த செவ்வாய்க்கிழமை அஜித்பவாரைத் தொடர்பு கொண்டு பாரதீய ஜனதாவை ஆதரிக்கும் அவரது முடிவை மறு பரிசீலனை செய்யவைத்து மாநில அரசியல் நாடகத்தின் 'மான் ஒவ் தி மச்' ஆகத் திகழ்கிறார் எனக் கருதப் படுகிறது.

இது குறித்து சிவசேனா கட்சியின் அதிகாரப்பூர்வ பத்திரிகையான சாம்னாவில் கூறப்பட்டு இருப்பதாவது:-

வலிமையான, அனுபவம் வாய்ந்த மற்றும் 'வழிகாட்டி' போன்ற சரத்பவார் எங்களுடன் உள்ளார். யாரையும் ஏமாற்றும் நோக்கத்துடன் எங்களது அரசு செயல்படாது. 1947 ஆம் ஆண்டுஓகஸ்டு 15 ஆம் திகதி சுதந்திரம் பெற்றபோது நாடு முழுவதும் மக்கள் எந்த மனநிலையில் இருந்தார்களோ, அதுபோன்ற மகிழ்ச்சிதான் தற்போது மகாராஷ்டிராத்தில் உள்ளது.

நாடு முழுவதும் முக்கிய தலை வர்கள் டெல்லி ஆட்சியாளர்களின் முன் மண்டியிட்டனர். ஆனால் உத்தவ் தாக்கரே அது போன்ற அழுத்தங்கள் கொடுக்கப்பட்ட போதும் அடிபணியாமல் இருந்தார்.

உத்தவ் தாக்கரே அவரது புகழுடன் சமரசம் செய்து கொள்ளவில்லை. அவரிடம் பொய் பேசியவர்களுடன் கைகோர்க்க மறுத்துவிட்டார். அரசு எந்திரம் யாருக்கு எதிராகவும் சதி திட்டங்களை தீட்டும் வேலையில் ஈடுபடாது. 3 காலில் நிற்கும் சிவ சேனா, காங்கிரஸ், தேசியவாத காங்கிரஸ் ஆட்சி நிலைக் காது என கூறி முன்னாள் முதலமைச் சர் தேவேந்திர பட்னாவிஸ் மாயத்தோற்றத்தை உருவாக்கி உள்ளார்.

மாநிலத்தை முன்னேற்ற பாதையில் கொண்டு செல்லவேண்டும் என்பதில் 3 கட்சிகளுக்குள் எந்த குழப்பமும் இல்லை. - என்று உள்ளது.

# தமிழகத்திலும் றொக்கெட் ஏவுதளம் தூத்துக்குடி குலசேகரத்தில் அமையும்



தூத்துக்குடி மாவட்டம் குலசேகரத்தில் றொக்கெட் ஏவுதளத்திற்கான திட்டவரைவு தயாரிக்கப்படுவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இது குறித்து மத்திய அணுசக்தித்துறை அமைச்சர் ஜிதேந்திர சிங் மக்களவையில் எழுத்து மூலம் அளித்த பதிலில், குலசேகரபட்டினத்தில் றொக்கெட் ஏவுதளம் அமைக்க அரசு முன்மொழிந்துள்ளதாகவும், அதற்கான திட்டவரைவு தயாரிக்கப்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி மையத்தில் இரண்டு ஏவுதளங்கள் உள்ளன.

இங்கு ஜி.எஸ்.எல்.வி. மற்றும் பி.எஸ்.எல்.வி. றொக்கெட்டுக்கள் ஏவப்பட்டு வருகின்றன. தற்போது மூன்றாவதாக புதிய ஏவுதளம் அமைப்பதற்கு உகந்த இடமாக, தூத்துக்குடி மாவட்டம், குலசேகரபட்டினம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. ஸ்ரீஹரிகோட்டா போன்றே குலசேகரபட்டினத்திலும் இரண்டு ஏவுதளங்கள் அமைக்க வேண்டும் என நீண்ட நாகளாக கோரிக்கை விடுக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

# தன்னக் கருணைக் கொலை செய்யக்கோரி ராஜீவ் காந்தி கொலைக் கைதி நளினி மனு!



வேலூர்,நவ.30

பல ஆண்டுகள் விடுதலைக்காக போராடியும் விடுதலை கிடைக்கவில்லை என்பதால் வாழ்க்கையில் விரக்தி அடைந்த நளினி தன்னை கருணைக்கொலை செய்யக்கோரி பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதம் அனுப்பி உள்ளார் எனத் தகவல் பரவி உள்ளது.

முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்ற முருகன் வேலூர் ஆண்கள் ஜெயிலிலும், அவரது மனைவி நளினி பெண்கள் ஜெயிலிலும் அடைக்கப் பட்டுள்ளனர்.

இந்த நிலையில் நளினி தன்னை விடுதலை செய்யக்கோரி தொடர் உண்ணாவிரதத்தை நேற்று முன்தினம் முதல் மேற்கொண்டுள்ளார். இதற்காக நேற்று முன்தினம் சிறை அதிகாரிகளிடம் மனு அளித்துள்ளார்.

இதற்கிடையே 28 ஆண்டுகளுக்கும் மேலாக சிறையில் வாழ்ந்து விட்டார் எனவும், பல ஆண்டுகள் விடுதலைக்காகப் போராடியும் விடுதலை கிடைக்கவில்லை என்பதால் வாழ்க்கையில் விரக்தி அடைந்த நளினி தன்னை கருணைக்கொலை செய்யக்கோரி பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதம் அனுப்பி உள்ளார் எனவும் தகவல் பரவியது.

இந்தத் தகவலை உறுதிபடுத்திக் கொள்ள சிறைத்துறை உயர் அதிகாரிகளைத் தொடர்பு கொண்டபோது அவர்கள் தகவல் தெரிவிக்க மறுத்துவிட்டனர். மேலும் சிறை அலுவலகத்தை தொடர்பு கொண்டு கேட்டபோது, அதிகாரிகளிடம் நளினி மனு அளித்துள்ளார், ஆனால் அதில் உள்ள தகவலை தெரிவிக்க முடியாது என அதிகாரிகள் மறுத்து விட்டனர்.

# தாயகத்துக்குப் பணம் அனுப்புவதில் இந்தியர்களே தொடர்ந்து முன்னணி



வெளி நாடுகளில் வேலை செய்பவர்கள் அதிகளவிலான பணத்தை தாய்நாட்டுக்கு அனுப்புவதில் இந்தியாவுக்கே முதலிடம்.

ஆசிய, பசிபிக் பிராந்தியத்தை சேர்ந்த வெளி நாடுகளில் வேலை செய்பவர்கள் அதிகளவிலான பணத்தை தாய்நாட்டிற்கு அனுப்பி வைக்கின்றனர்.

பணத்தைதாய்நாட்டிற்குஅனுப்பியவர்கள் பட்டியலில் இந்தியா தொடர்ந்து முதல் இடத்தை தக்க வைத்துள்ளது.கடந்த 2018ஆம் ஆண்டில் 7ஆயிரத்து 860 கோடி டொலர் தொகை தாய்நாட்டுக்கு வெளிநாட்டு வாழ் இந்தியர்களால் அனுப்பப்பட்டுள்ளது.

இந்தியாவில் இருந்து உலகின் பல நாடுகளுக்கு புலம் பெயர்ந்தோர் எண்ணிக்கை மிகப்பெரியது. இதனால் மிக அதிகளவிலான பணத்தை தாயகத்திற்கு அனுப்பி வைத்த நாடுகளின் பட்டியலில் இந்தியா தொடர்ந்து முதலிடத்தில் உள்ளது. இதற்கு அடுத்ததாக சீனா 2 ஆவது இடத்தில் இருக்கிறது.

கடந்த ஆண்டில் சீனர்கள் தாய்நாட்டுக்கு 6 ஆயிரத்து 741 கோடிடொலர்தொகையைஅனுப்பி வைத்துள்ளனர்.

ஆசிய, பசிபிக் பிராந்தியத்தில் வசிக்கும் 400 கோடி மக்களில் ஒவ்வொருவரும் வெளிநாடுகளில் இருந்து பணம் அனுப்புகிறநபராகவோ வெளிநாடுகளில் இருந்து வரும் நிதியால் உதவி பெறுபவராகவோ உள்ளனர்.

# பால்வெளி மண்டலத்தில் புதிதாக பெரிய கருந்துளை கண்டுபிடிப்பு!

## சூரியனை விட 70 மடங்கு பெரியதாம்!



சூரியனை விட 70 மடங்கு பெரிய கருந்துளை ஒன்றை சீனாவின் தேசிய வானியல் ஆராய்ச்சி மைய விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

பூமியில் இருந்து 15 ஆயிரம் ஒளி ஆண்டுகள் தொலைவில் உள்ளதாகக் கணிக்கப்பட்டுள்ள இதற்கு எல்பி – 1 என பெயரிடப்பட்டுள்ளது.

லமோஸ்ட் என்ற தொலைநோக்கி மூலம் ஆய்வு செய்ததில், ஈர்ப்பு விசை மூலம் கண்ணுக்கு தெரியாத ஒரு பொருளை மையமாக வைத்து பல நட்சத்திரங்கள் சுற்றிக் கொண்டிருந்தன என விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

பால்வெளி மண்டலத்தில் இதுவரை விஞ்ஞானிகள் கண்டுபிடித்த கருத்துளைகள் சூரியனை விட 20 மடங்குதான் பெரிதானவை என்று மதிப்பிடப்பட்டிருந்த நிலையில், தற்போது 70 மடங்கு பெரிய கருந்துளை கண்டறியப்பட்டுள்ளது.

# முன்னறிவிப்பின்றி டிரம்ப் ஆப்கானிஸ்தான் விஜயம்



காபூல்,நவ.30

அமெரிக்க அதிபர் டிரம்ப் முன்னறிவிப்பின்றி ஆப்கானிஸ்தான் சென்றார்.

அதிபராகப் பொறுப்பேற்ற பின் முதன்முறையாக அங்கு சென்ற அவரின் ‘ஏர்ஃபோர்ஸ் வன்’ விமானம் பக்ராம் விமானப்படைத்தளத்தில் தரையிறங்கியது.

பின்னர் அங்கு முகாமிட்டுள்ள அமெரிக்க வீரர்கள் மத்தியில் பேசும்போது அமெரிக்காவுடனான நீண்ட காலமாக போர் செய்யும் தாலிபான்கள் போர் நிறுத்தத்திற்கு ஒப்புக் கொள்வார்கள் என தாம் நம்புகிறார் என டிரம்ப் கூறினார்.

மேலும் ஆப்கானிஸ்தானில் இருந்து படிப்படியாக வீரர்கள் குறைக்கப்படுவார்கள் என்று கூறிய அவர், வரும் மாதங்களில் 5 ஆயிரம் வீரர்கள் திரும்ப அழைக்கப்படுவார்கள் எனக் குறிப்பிட்டார்.

தொடர்ந்து ஆப்கானிஸ்தான் அதிபர் அஷ்ரப் கானியைச் சந்தித்து டிரம்ப் பேச்சு நடத்தினார். அதிபர் டிரம்புடன் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் றொபர்ட் ஓப்ரைய்ன் மற்றும் சில அதிகாரிகளே உடன் சென்றனர் எனத் தகவல்கள் வெளி யாகி உள்ளன.

ஆப்கானிஸ்தானில் தற்போது சுமார் 13 ஆயிரம் அமெரிக்க வீரர்களும், ஆயிரக்கணக்கான நேட்டோ படை வீரர்களும் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# தலிபான்களுடன் சமாதானப் பேச்சு மீள ஆரம்பம் என ட்ரம்ப் அறிவிப்பு!



திடீர் பயணமாக ஆப்கானிஸ்தான் சென்ற அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப், இந்த பயணத்தின் போது, தலிபான்களுடனான அமைதி பேச்சு மீண்டும் தொடங்கியதாக அறிவிவித்தார்.

ஆப்கானிஸ்தானில் தலிபான் தீவிரவாதிகளுக்கும் அந்நாட்டு அரசுக்கும் இடையே 19 ஆண்டுகளாக உள்நாட்டு போர் நடந்து வருகிறது. தலிபான்களுக்கு எதிரான போரில் அமெரிக்கா, ஆப்கானிஸ்தானுக்கு பக்க பலமாக இருந்து வருகிறது. எனினும் இந்த உள்நாட்டுப் போரில் அப்பாவி மக்களே அதிகளவில் கொல்லப்படுகின்றமையால், போரை முடிவுக்கு கொண்டுவர ஆப்கானிஸ்தான் மற்றும் அமெரிக்கா அரசுகள் முனைப்பு காட்டின.

இதன் பலனாக தலீபான் அமைப்பும், அமெரிக்க அரசும் அமைதி பேச்சு நடத்த ஒப்புக்கொண்டன. அதன்படி கட்டார் தலைநகர் டோஹாவில் தலீபான் அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் அமெரிக்க அரசு அதிகாரிகள் இடையே 9 கட்டங்களாகப் பேச்சு நடந்தது. ஆனால், யாரும் எதிர்பாராத வகையில், திடீரென தலிபான்களுடனான பேச்சை ரத்து செய்கிறார் என டிரம்ப் கடந்த செப்டம்பரில் அறிவித்தார்.

இதற்கு தலிபான்கள் தரப்பில் கடும் எதிர்ப்புகள் எழுந்தன. இந்தச் சூழலில், தலிபான்களுடன் மீண்டும் பேச்சுத் தொடங்கியிருப்பதாக அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் அறிவித்துள்ளார். ஆப்கானிஸ்தானில் அமைதியை கொண்டு வரும் நோக்கத்தில் தலிபான்களுடன் தனது நிர்வாகம் பேச்சு நடத்த இருப்பதாக ஆப்கானிஸ்தானில் உள்ள பக்ராம் விமான தளத்தில் செய்தியாளர்களுக்கு பேட்டி அளிக்கையில் அவர் தெரிவித்தார். அதேவேளையில், ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்க படையினரை முழுமையாகத் திரும்பப் பெறுவதற்கான கால நிர்ணயம் எதையும் டிரம்ப் குறிப்பிடவில்லை.

தலீபான்கள் சண்டை நிறுத்தத்திற்கு ஒப்புக்கொள்ள வேண்டும் என்ற ஒப்பந்தத்தின் அடிப்படையில் பேச்சைத் தொடங்க இருக்கிறோம். தலிபான்களும் இந்த நிபந்தனையை ஏற்றுக்கொள்வார்கள் எனக் கருதுகிறேன்” என்று டிரம்ப் செய்தியாளர்கள் மத்தியில் தெரிவித்தார்.

# ஈராக்கில் போராட்டம் நடத்தியோர் மீது பொலிஸார் சூடு; 25 பொதுமக்கள் பலி!

ஈராக்கில் போராட்டக்காரர்கள் மீது பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 25 பேர் கொல்லப்பட்டனர்.

அரசின் நிர்வாக திறமையின்மை, பொருளாதார சரிவு, ஊழல் மற்றும் வேலையில்லாத் திண்டாட்டம் ஆகியவற்றைக் கண்டித்து கடந்த ஒரு மாதத்திற்கும் மேலாக அங்கு மக்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

அண்டை நாடான ஈரானின் ஆதிக்கம் தங்கள் மீது அதிகமாக இருப்பதாகக் கூறி வரும் மக்கள், நஸாரியா நகரின் நஜிப் என்ற இடத்தில் அமைந்துள்ள ஈரான் தூதரக அலுவலகத்தை தீயிட்டு எரித்தனர்.

போராட்டம் நீடித்ததை அடுத்து அங்கு குவிக்கப்பட்ட இராணுவத்தினர் சுட்டதில் 25 பேர் உயிரிழந்தனர்.150 க்கும் அதிகமானோர் படுகாயமடைந்தனர்.



# நாஸி, பாசிச கொள்கையாளர்களிடம் பெரும் அளவில் ஆயுதங்கள் பறிமுதல்

## இத்தாலிப் பொலிஸார் நடவடிக்கை



இத்தாலியில் நாஸி மற்றும் பாசிச கொள்கை கொண்டவர்களிடம் இருந்து ஏராளமான இயந்திரத் துப்பாக்கிகள் உள்ளிட்ட ஆயுதங்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

இரண்டாம் உலகப்போரின் முக்கிய காரணியாக இருந்தவர்கள் ஹிட்லர் மற்றும் முசோலினி. நாஸிஸம் மற்றும் பாசிசம் கொள்கையைக் கொண்ட இவர்களின் தத்துவத்தை பின்பற்றி வரும் சிலரிடம் ஆயுதங்கள் இருக்கின்றன எனப் பொலிஸாருக்குத் தகவல் கிடைத்தது.

இதையடுத்து மிலன் நகரின் பல்வேறு இடங்களில் பொலிஸார் மேற்கொண்ட சோதனையில் எம்16, ஏ.கே. 47, ஸ்னைப்பர் ரக துப்பாக்கிகள், ஏராளமான கைத் துப்பாக்கிகள், நீண்ட வாள்கள், குறு வாள்கள் போன்றவை ஏராளமாக சிக்கின.

# பருவ நிலை மாற்றத்தின் உச்சத்தை தொட்டது பூமி

## விஞ்ஞானிகள் எச்சரிக்கை

ஏற்கனவே தொட்டு விட்டாக விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.



பருவநிலை மாற்றத்தின் உச்சகட்ட புள்ளியை பூமி

பல்வேறு காரணங்களால் பூமி வெப்பமடைவது நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இதனால் பனி உருகுதல், அதிக வெப்பம், கடுங்குளிர் போன்றவற்றால் மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

இந்நிலையில் பருவநிலை மாற்றத்தை ’டிப்பிங் பொயிண்ட்’ என்ற அளவீட்டு முறை மூலம் விஞ்ஞானிகள் அளந்து வருகின்றனர்.

இந்நிலையில் டோமினோ விளைவு எனப்படும் சங்கிலித் தொடர் போன்ற நிகழ்வுகளால் பூமி கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், டிப்பிங் பொயிண்ட் முறையில் ஏற்கனவே உச்சபட்ச அளவான 9 புள்ளிகளை எட்டி விட்டதாகவும் இங்கிலாந்தின் எக்ஸடர் பல்கலைக்கழக பேராசிரியர் டிம் லென்டான் தெரிவித்துள்ளார். இதனால் வரும் காலங்களில் பாதிப்புகள் அதிகம் இருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# கோட்டா அரசின் இலங்கை வெளியுறவுக் கொள்கை இந்தியாவைப் பகைத்துக் கொள்ளாத சீனச் சார்பா?



**2019** ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 16ஆம் திகதி இடம்பெற்ற இலங்கையின் எட்டாவது ஜனாதிபதி தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷ வெற்றி பெற்றார்.

தேர்தல் முடிவுகளின் முக்கியமானதொரு பரிமாணம் தமிழ் பிரதேசங்களில் சஜித் பிரேமதாஸ பெற்றுக்கொண்ட வாக்குகள் ஆகும். தமிழ் மக்கள் பெரும்பன்மையாக வாழும் பிரதேசங்களில் அவர் மிகப்பெரும் வாக்கு வித்தியாசத்தில் வெற்றியடைந்தார்.

உதாரணமாக யாழ்பாண மாவட்டத்தில் சஜித் 83.86% வாக்குகளையும் கோட்டாபய ராஜபக்ஷ 6.24% வாக்குகளையும் பெற்றுக் கொண்டனர். வன்னி மாவட்டத்தில் இருவரும் முறையே 82.12 மற்றும் 12.27 சதவிகித வாக்குகளை பெற்றுக்கொண்டனர்.

இலங்கை அரசியலில் போதிய அறிமுக மற்ற ஒருவர் தேர்தல் முடிவுகள் பிரேமதாஸவுக்குத் தமிழ் மக்கள் மத்தியில் பாரிய செல்வாக்கு இருந்ததை காட்டுவதாக புரிந்துகொள்ளக் கூடும். உண்மையில் பிரேமதாஸவுக்கு தமிழ் மக்கள் மத்தியில் பாரிய ஓர் ஆதரவு இருந்ததாகக் கூற முடியாது.

பொதுவாக அவர் சிங்கள,பௌத்த தேசிய வாதத்தைப் பிரதிபலிப்பவரகவே இருந்தார். அத்துடன், அவரது அரசியல் செயற்பாடுகள் மிக அண்மைக்காலம் வரை சிங்களப் பிராந்தியங்களில் மையம் கொண்டதாகவே இருந்தது.

தமிழ் அரசியலில் அல்லாது பிரச்சனைகளில் அவர் போதிய அக்கறை கொண்டிருக்கவில்லை.

இத்தகைய பின்னணியிலும் மிகப்பெரிய அளவில் பிரேமதாஸ தமிழ்ப் பகுதிகளில் வெற்றியடைந்தமைக்கான காரணம் கோட்டாபய ராஜபக்ஷ வெற்றிபெறுவது தொடர்பில் தமிழ் மக்கள் மத்தியில் காணப்பட்ட அச்சமே ஆகும். சுருக்கமாக கூறுவதானால், தமிழ் மக்கள் அளித்த



வாக்குகள் 'அச்ச' வாக்குகளே அன்றி பிரேமதாஸவுக்கு ஆதரவான வாக்குகள் அல்ல.

இப்போது தேர்தலில் கோட்டாபய மிக இலகுவாக வெற்றி பெற்றுள்ள பின்னணியில் தமிழர் பிரச்சினைகளை புதிய ஜனாதிபதி எவ்விதம் கையாளப் போகிறார் என்கிற ஒரு எதிர்பார்ப்பும் கேள்வியும் எழுந்துள்ளன.

தமிழ் மக்கள் கோட்டாபயவுக்கு எதிராக உறுதியாக வாக்களித்துள்ள நிலையில், அவர்களுக்கு எதிரான நடவடிக்கைகள் புதிய அரசாங்கத்தினால் முன்வைக்கப்படலாம் என்கின்ற அபிப்பிராயம் ஒன்றும் காணப்படுகிறது.

தமிழ் மக்கள் தொடர்ந்து கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சிக்கு எதிராக வாக்களிப்பது பொது ஜன பெரமுனவுக்கு நீண்ட காலத்தில் ஒரு பிரச்சினையாக அமையக்கூடும்.

இந்த அச்சத்தில் ஓர் அடிப்படை இல்லாமல் இருக்க வில்லை.

தமிழ் வாக்களிப்புப் பிரச்சினையைக் கையாள்வதற்கு புதிய அரசாங்கத்திற்கு இரண்டு வழிமுறைகள் காணப்படுகின்றன.

ஒன்று – தமிழ்ப் பெரும்பான்மைப் பிரதேசங்களைச் சிதைப்பதன் மூலம் தமிழ் வாக்குகளைப் பலவீனப்படுத்துவது.

இரண்டு – தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்னைகளையும் அச்சங்களையும் தீர்ப்பதன் மூலம் அவர்களது ஆதரவைப் பெறுவது.

இவ்விரண்டு வழிமுறைகளில் எதனை அர



சாங்கம் கடைபிடிக்கப்போகின்றது என்பது பொறுத்திருந்து பார்க்கப்பட வேண்டியது. புதிய ஜனாதிபதி பதவி ஏற்றுக்கொண்டதன் பின் வெளியிட்ட கூற்றுகளின் அடிப்படையில் நோக்குகையில் கவனம் செலுத்தப்படுமாயின் அது ஆச்சரியப் படுத்துவதாக இருக்காது.

தேர்தலில் பிரேமதாஸவுக்கு உத்தியோக பூர்வமாக ஆதரவு அளித்ததுடன், தேர்தல் பிரசாரத்திலும் ஈடுபட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பு, அரசியல் தீர்வு தொடர்பில் புதிய அரசாங்கத்துடன் பேச்சில் ஈடுபடத் தயாராக இருக்கின்றது என அறிவித்துள்ளது. கடந்தகால அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு நோக்குகையில் இவ்விடயத்தில் கூட்டமைப்பு ஏமாற்றமடையப் போவதாகவே தோன்றுகிறது.

தென்இலங்கை தேசியவாதிகள் பொதுவாகவே தமிழ் மக்களுக்கு விசேடமான பிரச்சினைகள் எவையும் காணப்படவில்லை என்ற நம்பிக்கையைக் கொண்டுள்ளனர். எனவே, அரசியல் தீர்வு என்ற அடிப்படையில் இவ்வரசாங்கம் பேச்சுவில் ஈடுபடும் என்று எதிர்பார்க்க முடியாது. அத்துடன் கூட்டமைப்பைத் தமிழ் மக்களின் 'ஏக பிரதிநிதிகளாக' இந்த அரசாங்கம் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை.

எனவே, பேச்சு என்று ஆரம்பிக்கப்படுமாயின் அதுபலதமிழ்கட்சிகளுடன்என்றஅடிப்படையிலேயே பிரதிபலிக் கப்படும். குறிப்பாக ஈழ மக்கள் ஜனநாயகக்கட்சி உள்வாங்கப்படும். தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் போலவே, கூட்டமைப்புத் தாமே தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் என்று கூறியிருக்கின்றமையால் பலகட்சிபேச்சுக்குக்கூட்டமைப்பு இணங்கப் போவது இல்லை.

எனவே, எதிர்வரும் ஐந்து ஆண்டுகளுக்கு பேச்சு, அரசியல் தீர்வு என்பவை சாத்தியமற்றதாகவே இருக்கும்.

**கட்டமைப்பு அபிவிருத்தி**

உடனடி பின்யுத்த காலத்தில் ராஜபக்ஷ அரசாங்கம் வட,கிழக்கு பகுதியில் பாரிய கட்டமைப்பு அபிவிருத்திப் பணியில் ஈடுபட்டிருந்தது. இதற் கான ஒரு காரணம், தமிழ் மக்கள் இலங்கையின் ஏனைய குழுக்களைப் போல 'அபிவிருத்தி' பிரச்சினை ஒன்றையே கொண்டுள்ளனர் என்ற நம்பிக்கை ஆகும்.

எனவே மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தைப் போலவே, கோட்டாபய அரசாங்கமும் கட்டமைப்பு அபிவிருத்தி திட்டங்களிலேயே கவனம் செலுத்தும் என்று எதிர்பார்க்கலாம்.

மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் கட்டமைப்பு அபிவிருத்தித் திட்டங்களை இன நல்லிணக்கத்திற்கு பிரதான ஊடகமாகப் பயன்படுத்தி இருந்தது. இருப்பினும் இவ்வகை அணுகுமுறையை தமிழ் மக்கள் ஏற்றுக்கொண்டிருக்கவில்லை.

2015 மற்றும் 2019ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தல்களில் அவர்கள் அளித்த வாக்குகள் இதன் பிரதிபலிப்பாகவும் இருந்தன. எனவே, இந்த அரசாங்கத்தின்கீழ் முன்னெடுக்கப்படக் கூடிய கட்டமைப்பு அபிவிருத்தி திட்டங்கள் எந்த அளவுக்கு இனங்களுக்கு இடையிலான உறவைப் பலபடுத்த உதவும் என்பது சந்தேகத்திற்கிடமானதே.

புதிய அரசாங்கத்தின் கொள்கைகள் மற்றும் செயல்திட்டங்கள் தொடர்பில் எழுந்துள்ள மற்றுமோர் கேள்வி, வெளி விவகாரக் கொள்கை தொடர்பிலானது.

2009ஆம் ஆண்டு யுத்தம் முடிவடைந்த பின்னணியில் மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் தீவிர மட்டத்தில் சீனா சார்ந்த வெளி விவகாரக்கொள்கையைக் கடைப்பிடிக்கத் தொடங்கி இருந்தது.

அத்துடன் இந்தியா, அமெரிக்கா ஆகிய இரண்டு பிரதான நாடுகளும் ஓரம்கட்டப்பட்டிருந்தன. இத்தகைய பின்னணியிலேயே கோட்டாபயவின் வெளி விவகாரக் கொள்கை பற்றிய கேள்வி மேலெழுந்துள்ளது.

புதிய அரசாங்கம் பாரிய அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்கும் கொள்கையைக் கொண்டுள்ளமை யாவரும் அறிந்ததே. இத்திட்டங்களுக்கு சீனாவின் கடன் உதவிகள் இன்றியமையாதவை.

யதார்த்தம் என்னவெனில், இவ்விடயத்தில் இந்தியாவோ, அமெரிக்காவோ சீனாவுடன் போட்டியிட முடியாது என்பதாகும்.

எனவே, தவிர்க்க முடியாதபடி புதிய அரசாங்கம் சீனா சார்பான ஒரு கொள்கையையே முன்னெடுக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

இருப்பினும், ராஜபக்ஷ அரசாங்கம் 2015 ஆம் ஆண்டு ஒரு பாடத்தைக் கற்றுக்கொண்டிருக்கக்கூடும். அது, இந்தியாவை முழுமையாக ஓரம்கட்டுவது ஆரோக்கியமானது அல்ல என்பதாகும்.

எனவே, சீனா சார்பாக இருந்த போதிலும், இந்தியாவின் கரிசனைகளைக் கவனத்தில் எடுப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படலாம். இன்னொரு வகையில் கூறுவதாயின் இந்தியாவை பகைத்துக்கொள்ளாத சீனச் சார்புக் கொள்கை ஒன்று முன்னெடுக்கப்படலாம்.

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக பதவி ஏற்றதன் பின்னர் பயணம் செய்வதற்கான முதலாவது இடமாக புதுடெல்லி தேர்வு செய்யப்பட்டமை இதன் ஓர் அறிகுறியாக இருக்கக்கூடும்.

பேராசிரியர் எஸ்.ஐ.கீதபொன்கலன்,
சாலிஸ்பரி பல்கலைக்கழகம்,
மேரிலாந்து

நன்றி - பி.பி.சி தமிழ்



# முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபியை படம் எடுத்த பல்கலைக்கழக மாணவர்களிடம் தீவிர விசாரணை!

முல்லைத்தீவு, நவ. 30

முல்லைத்தீவு – முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபியைப் படம் எடுத்த யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகளைப் பின்தொடர்ந்து சென்று, புலனாய்வுப் பிரிவினரும் பொலிஸாரும் புதுக்குடியிருப்பு தேக்கம் காட்டுப் பகுதியில் இடைமறித்து விசாரணை நடத்தியுள்ளனர்.

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள் மற்றும் சில மாணவர்கள் நேற்று முன் தினம் முல்லைத்தீவுக்குச் சென்றிருந்தனர்.

அவர்கள் முள்ளி வாய்க்காலில் உள்ள நினைவுத் தூபிக்கும் சென்றிருந்தனர். அங்கு அவர்கள் புகைப்படங்கள் எடுத்துள்ளனர். அதனை அவதானித்த புலனாய்வுப் பிரிவினர் பல்கலைக்கழக மாணவர்களை பின் தொடர்ந்துள்ளனர்.

முல்லைத்தீவுப் பொலிஸாரும் அவர்களின் பின்னால் நோட்டமிட்டுச் சென்றுள்ளனர். மாணவர்கள் தங்கள் பயணத்தை முடித்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்தபோதும் மாணவர்களைப் புலனாய்வாளர்கள் பின்தொடர்ந்துள்ளனர்.

புதுக்குடியிருப்பு தேக்கம் காட்டுப் பகுதியில் அவர்களை வழிமறித்த பொலிஸார் எங்கிருந்து வருகிறீர்கள்?எதற்காக முல்லைவாய்க்கால் நினைவுத் தூபிக்குச் சென்றீர்கள்? என மாணவர்களைத் துருவித் துருவி விசாரித்துள்ளனர்.

நீங்கள் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள், முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபிக்குச் சென்று வருகிறீர்கள், அங்கு புகைப்படங்கள் எடுத்து வருகிறீர்கள் என எங்களுக்குத் தகவல் வந்துள்ளது. அதனாலேயே உங்களை விசாரணை செய்கின்றோம் என்பதையும் பொலிஸார் மாணவர்களுக்குக் கூறியுள்ளனர்.

மாணவர்களை நடு வீதியில் வைத்து விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் சில மணி நேரத்தின் பின்னர் விடுத்துள்ளனர்.

யாழ். பல்கலைக்கழக நிர்வாகம் வளாகத்துக்குள் மாணவர்கள் உள்நுழைய தடை விதித்திருந்த போதும், அந்தத் தடையை மீறி உணர்வுபூர்வமாக மாவீரர்களுக்கு மாணவர்கள் அஞ்சலி செலுத்தியிருந்தனர்.

இவ்வாறான நிலையில் மாணவர் ஒன்றிய பிரதிநிதிகளை கடந்த இரு நாள்களாக புலனாய்வுப் பிரிவினர் மற்றும் பொலிஸார் பின்தொடர்கின்றனர் என அச்சம் வெளியிட்டுள்ளனர். (ஐ)

## அரசியலில் தொடர்வார் மைத்திரிபால சிறிசேன

கொழும்பு, நவ. 30

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பொதுத் தேர்தலுக்குப் பின்னரும் தொடர்ந்து தீவிர அரசியலில் ஈடுபடுவார் என்று இலங்கை சுதந்திரக் கட்சியின் மூத்த துணைத் தலைவர் பேராசிரியர் ரோஹண லக்ஸ்மன் பியதாச தெரிவித்தார்.



சுதந்திரக் கட்சியின் மத்தியகுழுக்கூட்டம் இறுதியாகக் கூடிய சமயத்தில், முன்னாள் ஜனாதிபதி இதைத் தெரிவித்தார் என அவர் கூறினார்.

அவர் தற்போது இருப்பதைப் போல எதிர்காலத்திலும் சு.க.வின் தலைவராக இருப்பார் என்று பேராசிரியர் பியதாச கூறினார்.

இந்த இடைக்கால அரச காலத்தில் மைத்திரி அமைதியாக இருக்க முடிவு செய்துள்ளார். எவ்வாறாயினும், இந்த இடைக்கால அரசு முடிந்ததும் அவர் தனது தீவிர அரசியலைத் தொடருவார் என்றும் அவர் குறிப்பிட்டார். (ஐ)

## வடக்கு ரயில் சேவைகள் நேற்று முதல் வழமைக்கு

யாழ்ப்பாணம், நவ. 30

வடக்குக்கான ரயில் சேவைகள் நேற்று மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக ரயில்வே கட்டுப்பாட்டு நிலையம் தெரிவித்துள்ளது.

கடந்த புதன்கிழமை காங்கேசன்துறையிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்றுகொண்டிருந்த யாழ்தேவி ரயில் பிற்பகல் மூன்று மணியளவில் கல்கமுவ – அம்பன்பொல பகுதியில் வைத்துத் தடம் புரண்டு விபத்துக்குள்ளானது.



இதனைத் தொடர்ந்து வடக்குக்கான ரயில் சேவைகள் பாதிக்கப்பட்டன.

இந்த நிலையில் கடந்த புதன்கிழமை மாலை தொடக்கம் காங்கேசன்துறை – கொழும்பு இடையேயான ரயில் சேவைகள் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கொத்மலை நீர்த்தேக்கத்தில் யுவதி ஒருவர் சடலமாக மீட்பு

கொழும்பு, நவ. 30

பூண்டுலோயா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொத்மலை நீர்த்தேக்கத்தில் நேற்று முன் தினம் மதியம் யுவதியின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பொது மக்கள் வழங்கிய தகவலின் அடுத்தே இந்தச் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

பொலிஸார் மற்றும் பொதுமக்களின் உதவியுடன் மீட்கப்பட்ட இந்தச் சடலம் மரண விசாரணைகளின் பின் வைத்தியப் பரிசோதனைக்காக நாவலப்பிட்டி வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் சானிக்கா மதுானி ஏக்கநாயக்க (வயது – 18) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இப்பெண் தற்கொலை செய்து கொண்டரா அல்லது கொலை செய்யப்பட்டு நீர்த் தேக்கத்தில் எறியப்பட்டுள்ளாரா என்பது தொடர்பாக பொலிஸார் புலன் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ஐ)

## தூதரகப் பணியாளருக்கு அச்சுறுத்தல்; முழு விசாரணைக்கு மஹிந்த உத்தரவு!



கொழும்பு, நவ. 30

கொழும்பிலுள்ள சுவிட்சர்லாந்து தூதரகத்தில் கடமையாற்றும் பெண் பணியாளர் கடத்தப்பட்டமை தொடர்பான முழுமையான அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்குமாறு பாதுகாப்புப் பிரிவுக்கு அறிவுறுத்தியுள்ளார் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இதனிடையே கொழும்பில் சுவிஸ் தூதரகப் பெண் ஊழியர் ஒருவர் கடத்தப்பட்டமை தொடர்பான விசாரணை தொடர்பாக இலங்கைத் தூதுவர் கருணாசேன ஹெட்டியாராச்சி சுவிஸ் அதிகாரிகளைச் சந்தித்து விளக்கவுள்ளார்.

இராஜதந்திர உறவுகள் தொடர்பான வியன்னா மாநாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள கடமைகள் தொடர்பான தனது உறுதிப்பாட்டை இலங்கை அரசு மீண்டும் உறுதிப்படுத்துகிறது என்று வெளியுறவு அமைச்சு வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.

" இந்தச் சம்பவம் குறித்து அறிவிக்கப்பட்டதும், இந்த விவகாரம் தொடர்பாக விசாரணையைத் தொடங்க பொலிஸ் உடனடியாக நடவடிக்கை எடுத்துள்ளது, " என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

சுவிஸ் ஊடக அறிக்கையின்படி, பெண் ஊழியர் திங்களன்று கடத்தப்பட்டார். தூதரகம் தொடர்பான தகவல்களை தருமாறு அச்சுறுத்தப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 704 பொலிஸ் அதிகாரிகளுக்கு பாதுகாப்பு கருதியே தடையாம்

*கொழும்பு, நவ. 30*

*பொலிஸ் அதிகாரிகள் 704 பேர் வெளிநாடுகளுக்குச் செல்லவிடாமல் தடுக்கப்பட்டது, தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலான விடயம் அல்ல. இது தேசிய பாதுகாப்பு சார்ந்த விடயமே என்று தகவல், தொடர்பாடல் தொழிநுட்பம், உயர் கல்வி, தொழிநுட்ப புத்தாக்க அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.*

*அவர் மேலும் தெரிவிக்கையில் -*

*பொலிஸ் ஊடகப் பிரிவு ஒன்று இல்லையென்ற விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றது. ஆனால் பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி இதற்கான நடவடிக்கை எடுப்பார். ஜனாதிபதி நாடு திரும்பியவுடன் உடனடியாகப் பாதுகாப்பு ஊடகப் பேச்சாளர் ஒருவரை நியமிப்பார் - என்றார். (ஐ)*

## ரொறன்ரோவில் தமிழ்ப் பெண்ணைக் காணோம்!

ரொறன்ரோ, நவ. 30



கனடா – ரொறன்ரோவில், தமிழ்ப் பெண் ஒருவர் காணாமல் போயுள்ளார் எனக் கனேடிய பொலிஸார் அறிவித்துள்ளனர்.

29 வயதுடைய தாஸ்மி ஶ்ரீஸ்கந்தராஜா என்பவரே காணாமல் போயுள்ளவர் என ரொறன்டோ பொலிஸார் கூறினர்.

கடந்த 26ஆம் திகதி இரவு 7 மணிக்கு மிட்லாண்ட் அவென்யூ மற்றும் எக்ளிண்டன் அவென்யூ கிழக்குப் பகுதியில் கடைசியாக இவர் தென்பட்டுள்ளனார். 5 அடி உயரமும், 120 இறாத்தல் எடையும் கொண்ட இவரைக் கண்டு பிடிக்க ரொறன்ரோ பொலிஸார் பொதுமக்களின் உதவியைக் கோரியுள்ளனர். (ஐ)



# ஹாட்லி மாணவனுக்கு அமோக வரவேற்பளிப்பு

யாழ்ப்பாணம், நவ. 30

சுவீடனில்போராஸ்நகரில்நடைபெற்ற கிங் ஒவ் த ரிங் (KING OF THE RING 2019) சர்வதேச குத்துச்சண்டைத் தொடரில் யாழ்ப்பாணம் பருத்தித்துறை ஹார்ட்லி கல்லூரியைச் சேர்ந்த விக்னேஸ்வரன் ஷானுஜன் வெள்ளிப் பதக்கம் வென்று சாதனை படைத்தார்.

அவரை வரவேற்றுக் கௌரவிக்கும் நிகழ்வு பருத்தித்துறை ஹாட்லி கல்லூரி சமூகத்தால் நேற்றுக் காலை முன்னெடுக்கப்பட்டது.

ஐரோப்பாவில் வருடந்தோறும் பாடசாலை மாணவர்களுக்காக நடைபெறுகின்ற பெரியளவிலான குத்துச்சண்டைப் போட்டித் தொடரான 'கிங் ஒவ் த ரிங்' சர்வதேச குத்துச்சண்டைப் போட்டிகள் சுவீடனின் போராஸ் உள்ளக அரங்கில் கடந்த 21ஆம் திகதி முதல் 24ஆம் திகதி வரை நடைபெற்றன.

இதில் சுவீடன், இங்கிலாந்து, நோர்வே, பின்லாந்து, போர்த்துக்கல், ஸ்கொட்லாந்து, உகண்டா, கனடா, இந்தியா மற்றும் இலங்கை உள்ளிட்ட 22 நாடுகளைச் சேர்ந்த சுமார் 500இற்கும் அதிகமான வீரர்கள் கலந்துகொண்டனர்.

இந்த நிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஆண்களுக்கான 81 கிலோ கிராம் எடைப் பிரிவு இறுதிப் போட்டியில் பருத்தித்துறை ஹார்ட்லி கல்லூரிமாணவன்விக்னேஸ்வரன்ஷானுஜன் வெள்ளிப் பதக் கத்தை வென்றார்.



# அம்பத்தி ராயுடுவுக்கு எதிராக நடவடிக்கை!

இந்தியக் கிரிக்கெட் அணியின் முன்னணி துடுப்பாட்ட வீரரான அம்பத்தி ராயுடுவுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க ஹைதராபாத் கிரிக்கெட் சங்கம் முடிவு செய்துள்ளது.

ஹைதராபாத் அணியின் தலைவராக நியமிக்கப்பட்ட அம்பத்தி ராயுடு, அண்மையில் ஹைதராபாத் கிரிக்கெட்டில் நிலவும் அரசியல் காரணமாகவும், கிரிக்கெட் சங்கத்தில் ஊழல் நடந்துள்ளதாகவும் கூறி ரஞ்சிக் கிண்ண தொடரிலிருந்து விலகுகிறார் என அறிவித்தார்.

இதனால், அம்பத்தி ராயுடுவின் விலகலுக்குப் பின்னர், ஹைதராபாத் அணியின் தலைவராக பி.பி. சந்தீப் தேர்வாகினார்.

இந்தநிலையில், அம்பத்திராயுடுவுக்கெதிரானநடவடிக்கை குறித்து ஹைதராபாத் கிரிக்கெட் சங்க செயலாளர் விஜய் ஆனந்த் கூறுகையில் –

அம்பதிராயுடு ஹைதராபாத் கிரிக்கெட் சங்கத்துக்கு இழிவு ஏற்படுத்தும் விதமாக பேசி இருக்கிறார். அவர் விதிமுறைகளை மீறி உள்ளார். இதனால் அவர் மீது நடவடிக்கை எடுக்க உள்ளோம்.

தலைமைச் செயல் அதிகாரி அவரிடம் விசாரணை நடத்த இருக்கிறார். அவரது அறிக்கையின் அடிப்படையில் அம்பதிராயுடுவின் மீது நடவடிக்கை இருக்கும் – எனக் கூறினார்.

அத்தோடு, இதுதொடர்பாக தெலுங்கானா அமைச்சருக்கும் தனது புகாரை அம்பத்தி ராயுடு அனுப்பியுள்ளார்.

அம்பதிராயுடுவின் இந்தக் குற்றச்சாட்டு தொடர்பாக ஹைதராபாத் கிரிக்கெட் சங்க தலைவரும், இந்திய அணியின் முன்னாள் தலைவருமான அசாருதீன் கூறும்போது, 'அவர் விரக்தி அடைந்த கிரிக்கெட் வீரர்' என கூறினார்.

அசாருதீனின் கருத்துக்கு பதிலளித்த அம்பதிராயுடு, 'இதை தனிப்பட்ட பிரச்சினையாக பார்க்க வேண்டாம். இந்தப் பிரச்சினை நம்மை விட பெரியது. தனிப்பட்ட மோதலை விட்டுவிட்டு வருங்கால கிரிக்கெட் வீரரைக் காப்பாற்றுங்கள்' என்று தெரிவித்துள்ளார்.

தனது ஓய்வு அறிவிப்பை மீளப்பெற்று மீண்டும் கிரிக்கெட் போட்டிகளில் விளையாட தீர்மானித்திருந்த அம்பத்தி ராயுடு,



சமீபத்தில் நடந்த விஜய் ஹசாரே மற்றும் முஸ்தாக் அலி கிண்ணத்துக்கான தொடரில், ஹைதராபாத் அணியின் தலைவராக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இங்கிலாந்தில் நடைபெற்று முடிந்த உலகக்கிண்ண கிரிக்கெட் தொடருக்கான இந்திய அணியில், வாய்ப்பு வழங்கப்படாத விரகத்தியில், கடந்த ஜுலை மாதம் ஓய்வு அறிவிப்பை வெளியிட்ட அம்பத்தி ராயுடு, மீண்டும் தனது ஓய்வு முடிவினை மாற்றிக்கொண்டு கிரிக்கெட் போட்டிகளில் விளையாடுவதாக அறிவித்தார்.

இதன்படி, 34 வயதான அம்பத்தி ராயுடு, இன்னும் ஐந்து வருடங்கள் கிரிக்கெட் விளையாட தீர்மானித்துள்ளார்.

இதுவரை 55 ஒருநாள் போட்டிகளில் விளையாடியுள்ள அம்பத்தி ராயுடு, 3 சதங்கள் 10 அரைசதங்கள் அடங்கலாக 1694 ஓட்டங்களைக் குவித்துள்ளார். அதிகபட்ச ஓட்ட எண்ணிக்கை 124 ஆகும். சராசரி 47.06 ஆகும்.

இதேபோல, 6 சர்வதேச ரி – 20 போட்டிகளில் விளையாடியுள்ள அவர், 42 ஓட்டங்களை பெற்றுள்ளார். அதிகபட்ச ஓட்ட எண்ணிக்கை 20 ஆகும். சராசரி 10.5 ஆகும்.

# மேற்கிந்திய தீவு அணி அறிவிப்பு!




இந்தியா அணிக்கெதிரான ரி – 20 தொடரில் விளையாடும் 15பேர் கொண்ட மேற்கிந்திய தீவுகள் அணி விவரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே இத்தொடருக்கான இந்தியா அணி விவரம் அறிவிக்கப்பட்டு விட்ட நிலையில், பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் மேற்கிந்திய தீவுகள் அணி விவரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கிந்திய தீவுகள் கிரிக்கெட் அணி, இந்தியாவுக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டு மூன்று போட்டிகள் கொண்ட ரி – 20 தொடர், மூன்று போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் விளையாடுகின்றது. இந்த நிலையில் இதில் முதலாவதாக ரி – 20 தொடருக்கான 15பேர் கொண்ட மேற்கிந்திய தீவுகள் அணி விவரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

கிரன் பொலார்ட் தலைமையிலான இந்த அணியிலிருந்து, விக்கெட் காப்பாளர் சாய் ஹோப் நீக்கப்பட்டுள்ளார். அவருக்குப் பதிலாக அனுபவ வீரரான தினேஷ் ராம்தின் அணியில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளார்.

ஆப்கானிஸ்தான் அணிக்கெதிரான தொடரின் போது, முழங்கால் காயத்திற்கு உள்ளான பெபியன் அலென், மீண்டும் அணியில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளார்.

மேலும், அணியின் வேகப்பந்து வீச்சாளரான அல்சார்ரி ஜோசப்பிற்கு அணியில் இடம் கிடைக்கவில்லை.

இதுதவிர பந்தைச் சேதப்படுத்தியமைக்காக நான்கு போட்டிகளில் விளையாடுவதற்கு தடைவிதிக்கப்பட்ட நிக்கோலஸ் பூரான், இத்தொடரின் இரண்டாவது போட்டியில் அணியுடன் இணைவார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாக அணியில் இடம்பெறாமல் இருந்த அனுபவதுடுப்பாட்ட வீரர் லெண்ட்ல் சிமொன்ஸ் அணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளார்.

மேலும், நடப்பு கரீபியன் பீரிமியர் லீக் தொடரில் சிறப்பாக விளையாடிய வீரர்களான பிரெண்டன் கிங், கெர்ரி பியர், செர்பேன் ருத்தர்போர்ட், கெஸ்ரிக் வில்லியம்ஸ், ஹெய்டன் வோல்ஷ் ஆகியோருக்கு வாய்ப்புக் கிடைத்துள்ளது.

அனுபவ வீரர்களான கிறிஸ் கெய்ல், கார்லோஸ் பிரத்வெயிட், ஆந்ரே ரஸ்ஸல் ஆகியோர் அணியில் இடம்பெறவில்லை. சரி, தற்போது அணியின் முழுமையான விவரத்தை பார்க்கலாம் –

கிரன் பொலார்ட் தலைமையிலான அணியில், பெபியன் அலென், செல்டோன் கொட்ரேல், சிம்ரொன் ஹெட்மியர், ஜேசன் ஹோல்டர், கீமோ போல், பிரெண்டன் கிங், எவீன் லீவிஸ், கெர்ரி பியர், நிக்கோலஸ் பூரான், தினேஷ் ராம்தின், செர்பேன் ருத்தர்போர்ட், லெண்ட்ல் சிமொன்ஸ், கெஸ்ரிக் வில்லியம்ஸ், ஹெய்டன் வோல்ஷ் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

மேற்கிந்திய தீவுகள் அணி, அண்மையில் இந்தியாவின் லக்னோவில் நடைபெற்ற ஆப்கானிஸ்தான் அணிக்கெதிரான மூன்று போட்டிகள் கொண்ட ரி–20 தொடரை, 1–2 என்ற கணக்கில் ஆப்கானிஸ்தான் அணியிடம் இழந்தமை குறிப்பிடத்தக்கது.

இரு அணிகளுக்கிடையிலான முதலாவது ரி – 20 போட்டி, எதிர்வரும் மாதம் 6ஆம் திகதி மும்பை வான்கடே மைதானத்தில் நடைபெறுவதாக இருந்தது.

ஆனால், 6ஆம் திகதி பாபர் மசூதி இடிப்பு தினம் கடைபிடிக்கப்படுவதால் மாநிலம் முழுவதும் பாதுகாப்பை அதிகரிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. அதனால் போட்டிக்கு பாதுகாப்பு வழங்க இயலாது என அம்மாநில பொலிஸ் தரப்பில் கூறப்பட்டிருந்தது.

இந்நிலையில் 6ஆம் திகதி வான்கடே மைதானத்தில் நடைபெற இருந்த போட்டி ஹைதராபாத் ராஜீவ் காந்தி சர்வதேச மைதானத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

இதற்கு பதிலாக, டிசெம்பர் 11ஆம் திகதி நடைபெற இருக்கும் 3ஆவது மற்றும் இறுதி போட்டி மும்பை வான்கடே மைதானத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

# இலங்கை வீரர்களுக்கு விஸா நிராகரித்து அமெரிக்கா அதிரடி

இலங்கை 19 வயதுக்குட்பட்ட கிரிக்கெட் அணியினருக்கு, அமெரிக்கா விசா நிராகரிக்கப்பட்ட பின்னர் வீரர்கள் கரீபியனுக்கு புறப்படுவது தடைப்பட்டுள்ளது.

19 வயதிற்குட்பட்ட கிரிக்கெட் வீரர்கள் அமெரிக்கா வழியாக ஆன்டிகுவாவுக்கு பயணிக்க திட்டமிடப்பட்டிருந்தனர்.

ஆனால்ஏழுவீரர்களின்விசாவிண்ணப்பங்களை கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகம் நிராகரித்ததை அடுத்து அவர்கள் புறப்படுவது கால வரையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கரீபியனில் நடைபெறவிருக்கும் முத்தரப்புப் போட்டிகளில் விளையாட மேற்கிந்திய தீவுகள் மற்றும் இங்கிலாந்து 19 வயதுக்குட்பட்டோர் அணிகளுடன் இலங்கை 19 வயதுக்குட்பட்டோர் அணியும் பங்கேற்க இருந்தனர்.

இத்தொடரில் விளையாடுவதின் மூலம் அடுத்த ஆண்டு தென்னாபிரிக்காவில் நடைபெறும் ஐ.சி.சி. இளைஞர் உலகக் கிண்ணத்துக்கு முன்னதாக, ஜூனியர் கிரிக்கெட் வீரர்களுக்கு மிகவும் தேவையான அனுபவம் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வீரர்களை கரீபியனுக்கு அழைத்துச் செல்வதற்கான மற்றொரு வழியைக் கண்டறிவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், ஆனால் அவர்கள் புறப்படுவது அடுத்த வாரத்துக்குத் தள்ளி வைக்கப்பட வேண்டும் என்றும் இலங்கை கிரிக்கெட் வட்டாரங்கள் தெரிவித்தன.

போட்டியின் முதல் ஆட்டம் டிசெம்பர் 6 ஆம் தேதி திட்டமிடப்பட்டுள்ளதால் இலங்கை அணிக்கு நேரம் குறைவாக இருப்பதாகக் கூறப்படுகிறது.

பல ஆண்டுகளாக இலங்கை அணிகள் லண்டனில் கேட்விக் அல்லது ஹீத்ரோ வழியாக கரீபியன் பயணம் செய்கின்றன.

இருப்பினும், இந்த முறை, லண்டன் வழியாகச் செல்லும் பாதையுடன் ஒப்பிடும்போது ரிக்கெட் விலைகள் குறைவாக இருந்ததால் அமெரிக்கா வழியாகச் செல்ல இலங்கை கிரிக்கெட் சபை திட்டமிட்டுள்ளது.

19 வயதிற்குட்பட்ட அணியின் செயல்திறனை மேம்படுத்துவதற்கு இலங்கை கிரிக்கெட் சபை பல முயற்சிகளைமேற்கொண்டுவருகிறது.எவ்வாறாயினும், 19 வயதிற்குட்பட்ட உலகக் கிண்ணத்துக்கான ஜூனியர் அணியின் தயாரிப்புகளுக்கு இந்த பின்னடைவு மிகப்பெரிய அடியாக அமைந்துள்ளது.



# 5 மாவட்டங்களில் டெங்கு அபாயம்!



கொழும்பு, நவ. 30

ஐந்துமாவட்டங்களில்டெங்கு நோய் பரவும் அபாயம் காணப்படுவதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

டெங்கு ஒழிப்பு பிரிவினால் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பு, கம்பஹா, கண்டி, யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களுக்கே இவ்வாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நாட்டின் பல பகுதிகளில் தொடர்ச்சியாக சீரற்ற காலநிலை நிலவி வருகின்றது.

இதனால் டெங்கு நோயை ஏற்படுத்தும் நுளம்புகளின் பெருக்கம் அதிகரித்துள்ளதாக டெங்கு ஒழிப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை, இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் டெங்குக் காய்ச்சல் காரணமாக 90 பேர் உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ஐ)

# பூநகரியில் விபத்து; நான்கு பேர் காயம்



கிளிநொச்சி, நவ. 30

பூநகரி – செல்விபுரம் வீதி வளைவில் இடம்பெற்ற வாகன விபத்தில், நால்வர் காயமடைந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கிளிநொச்சியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த கப் ரக வாகனமே நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு விபத்துக்குள்ளாகியுள்ளது.

வேகக் கட்டுப்பாட்டை இழந்த இந்த கப் ரக வாகனம் வீதி ஓரத்தில் இருந்த மரமொன்றுடன் மோதியுள்ளது. இதன்போது வாகனத்தில் பயணித்த நால்வரில், முன் இருக்கையில் அமர்ந்து பயணித்த சாரதி மற்றும் உதவியாளர் ஆகிய இருவரும் படுகாயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

சம்பவத்தில் காயமடைந்தவர்களில் மூவர், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மற்றையவர் பூநகரி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பூநகரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

# வெள்ளை வான் கலாசாரம் மீண்டும் இங்கு வேண்டாம்!

## ஜனாதிபதியிடம் மத்துமபண்டார கோரிக்கை



கொழும்பு, நவ. 30

வெளளை வான் கலாசாரத்தை மீண்டும் நாட்டில் உருவாக்கவேண்டாமென ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விடம் முன்னாள் அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார கோரியுள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

குற்றப்புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள், நாட்டிலிருந்து வெளியேற முடியாத வகையில் அரசு தற்போது தடை விதித்துள்ளது.

குற்றப்புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் சகலரினதும் பெயர்ப் பட்டியலை வெளிப் படுத்தியுள்ளமை தவறானதாகும்.

இராணுவத்தைக் காட்டிக் கொடுத்துவிட்டதாக அன்று தெரிவித்தவர்கள், குற்றப்புலனாய்வு அதிகாரிகளை இன்று காட்டிக்கொடுக்கின்றனர் .

அத்துடன் குற்றப்புலனாய்வுப் பிரிவினரைப் பழிவாங்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டாம்.

அந்தத் திணைக்களத்திலுள்ள அதிகாரிகள், யுத்த காலத்தில் விசேட கடமையாற்றியவர்கள். எனவே அவர்களைச் சர்வாதிகாரப் போக்கில் வழிநடத்த வேண்டாம்.

இவ்வாறு குற்றப்புலனாய்வுப் பிரிவு முடக்கப்பட்டால், குற்றச்செயல்கள் மீண்டும் நாட்டுக்குள் அதிகரிக்கும்.

இதேவேளை, மறுமுனையில் இலங்கையிலுள்ள சுவிட்சர்லாந்து தூதரகத்தில் பணியாற்றிய பெண் பணியாளர் ஒருவர், துப்பாக்கி முனையில் அச்சுறுத்தி வாகனமொன்றில் பலவந்தமாக ஏற்றிச்செல்லப்பட்டார். இதற்குக் காரணம், அதிகாரியொருவ ருக்கு கடவுச்சீட்டு வழங்கியமையாகும்.

எனவே, வெள்ளைவான் யுகத்துக்கு நாட்டை மீண்டும் கொண்டு செல்ல வேண்டாம் – என்றார். (ஐ)

# பாதுகாப்புச் செயலாளரை சந்தித்தது ஐ.நா. விசேட குழு

கொழும்பு, நவ. 30

ஐ.நா. போதை மற்றும் குற்றங்கள் தொடர்பான அதிகாரிகளுக்கும், பாதுகாப்புச் செயலாளர் கமல் குணரட்னவுக்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

மிவா காட்டோ என்ற அதிகாரியின் தலைமையில் நான்கு பேரைக் கொண்ட குழுவினர் இச் சந்திப்பில் பங்கேற்றுள்ளனர்.

இலங்கையின் போதைப்பொருள் ஒழிப்புக்கான பயிற்சிகள் மற்றும் வலுவூட்டல் என்பன குறித்து இதன்போது பேசப்பட்டிருந்ததாகக் கூறப்படுகின்றது.

ஐக்கிய நாடுகளின் யூ.என்.ஓடி.சி. அமைப்பு அங்கத்துவ நாடுகளுக்கு மத்தியில் பயிற்சிகள் மற்றும் கடத்தல்கள் போன்றவற்றைக் குறைப்பதற்கான திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது.

இதன் ஒரு பகுதியாகவே இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ஐ)

# ரிஷாத், ஹக்கீம், ராஜித உள்ளிட்டோரை உடனே கைது செய்யுமாறு கோரிக்கை!



கொழும்பு, நவ. 30

முன்னாள் அமைச்சர்களான ரிஷாத் பதியூதீன், ரவூப் ஹக்கீம், ராஜித சேனாரத்ன, ஹிஸ்புல்லா உள்ளிட்டவர்களை உடனடியாகக் கைது செய்யுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ராவணபலய அமைப்பின் இணைப்பாளரான இத்தேகந்தே சத்தாதிஸ்ஸ தேரர் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

அத்துடன், குற்றப் புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பொறுப்பாளரான ஷானி அபேசேகரவையும் கைது செய்து விசாரணைக்கு உட்படுத்த வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டுள்ள அவர், ‘கடந்த காலங்களில் ரிஷாத், ஹக்கீம், ஹிஸ்புல்லா உள்ளிட்டவர்கள் இனவாதிகளாகவே செயற்பட்டார்கள். கிழக்கு மாகாணத்தை இந்த நாட்டின் வேறே ஒரு பகுதியாக இயக்கப் பார்த்தார்கள்.

இயற்கை மரங்களை அழித்துவிட்டு சவூதி அரேபிய மரங்களை இங்கே நட்டார்கள். இவர்கள் கடுமையாக இனவாதத்தை விதைத்து வந்தனர். அதேபோன்று திருடர்கள் நாட்டிலிருந்து தப்பிச் செல்லும் வழிகளைத் தடுக்க வேண்டும்.

ரிஷாத் போன்றவர்கள் புறம்பான திருடர்கள். அதற்கான ஆதாரங்கள் எம்மிடம் உள்ளன. அதேவேளை நிரந்த டி சில்வா போன்றவர்கள் இன்று நாட்டிலிருந்து தப்பிச்செல்லும் நிலை உள்ளது. அவருக்கு உதவி செய்தவர்கள் இருக்கின்றனர்.

அதேபோல இரகசியப் பொலிஸார் இந்த நாட்டுக்காக அல்லது வெளிநாடுகளுக்காகப் பணி புரிந்திருக்கிறார்கள் என்கிற சந்தேகம் நிலவுகிறது.


அதன் முன்னாள் பொறுப்பதிகாரி ஷானி அபேசேகரவை கைது செய்தால் பல இரகசியத் தகவல்களையும் அம்பலப்படுத்த முடியும் என நம்புகிறோம்.

ஜெனீவாவில் எமக்கெதிரான சகல இரகசியத் தகவல்களுக்கும் குற்றப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த சில அதிகாரிகளே பொறுப்புகூற வேண்டும் – என்றார். (ஐ)



காலைக்கதிர் Kalaikathir





# தமிழ் மக்களைச் சொந்த இடங்களில் மீள்குடியேற்றுவதை தொடரவேண்டும்

## கோட்டாவிடம் இந்தியா வலியுறுத்து

புதுடில்லி, நவ. 30

இலங்கையில் உள்நாட்டுப் போரில் இடம்பெயர்ந்த தமிழர்களை மீண்டும் சொந்தஇடங்களில் குடியமர்த்தும் திட்டத்தை தொடர வேண்டும் என்று இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் வலியுறுத்தியுள்ளார்.





இரண்டு நாள் உத்தியோக பூர்வ விஜயமாக இந்தியா சென்றுள்ள கோட்டாபய ராஜபக்ஷ நேற்று வெள்ளிக்கிழமை இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கரைச் சந்தித்து ஆலோசனை நடத்தினார்.

இதன்போது, இந்திய நிதியுதவியில் தமிழர்களுக்கு வீடு கட்டும் திட்டம், திருகோணமலையில் எண்ணெய் குதம், தமிழர் பகுதியை இணைக்கும் ரயில் பாதைத் திட்டம் உள்ளிட்ட அம்சங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளது.

இறுதி யுத்தத்தின்போது நடந்ததாகக் கூறப்படும் யுத்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பான விசாரணை, தமிழக மீனவர்கள் மீது நடத்தப்படும் தாக்குதல், தீவிரவாத எதிர்ப்பு நடவடிக்கை போன்ற அம்சங்கள் குறித்தும் பேசப்பட்டதாகக் கூறப்பட்டது. (ஐ)

# பொதுத் தேர்தலுக்கான வாய்ப்பை தட்டிக்கழித்து வருகின்றது ஐ.தே.க.

## திலும் அமுனுகம குற்றச்சாட்டு



கொழும்பு, நவ. 30

பொதுத் தேர்தலுக்குச் செல்வதற்கான வாய்ப்பை ஐக்கிய தேசியக் கட்சியே தட்டிக்கழித்து வருவதாக இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம குற்றம் சுமத்தியுள்ளார்.

இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள அவர் –

நாடாளுமன்றத்தில் எதிர்காலத்தில் ஏற்படப்போகும் சவால்களைப் பொதுஜன பெரமுன எப்படியேனும் சமாளித்துக்கொள்ளும்.

எம்முடன் இணைய வருபவர்களின் எண்ணிக்கை அதிகம் என்றாலும் அவர்களை உள்ளீர்ப்பதா என்பதுதான் பிரச்சினை.

இந்த அரசுக்கு அவசியமான தருணத்தில் ஆனந்த அளுத்கமகே, நிரோஷன் பெரேரா போன்றவர்கள் எம்முடன் இணைந்தமை பலமாக உள்ளது.

ஆட்சிக்கு வந்தவுடன் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையைத் தந்து பொதுத் தேர்தலுக்கு செல்வதற்கான ஆணையைத் தரும்படி கோரினோம். ஆட்சியிலிருக்கவேண்டியது யார் என்பதை மக்கள் தீர்மானிப்பார்கள்.

ஆனாலும் அதற்கு ஐக்கிய தேசியக் கட்சி விரும்பவில்லை. அந்தக் கட்சிக்குச் சரியான பதிலை மக்கள் கடந்த தேர்தலில் வழங்கினார்கள். அவர்களுடைய ஆட்சிமுறை தவறானது என்பதையும் மக்கள் சுட்டிக்காட்டினார்கள்.

தேர்தலுக்குச் செல்ல விருப்பமில்லை என்றால், அதற்கான இடத்தைஎமக்கு ஒதுக்கிக்கொடுக்க வேண்டும்என்ற வேண்டுகோளை ஐக்கிய தேசியக்கட்சிக்கு முன்வைக்கின்றோம் – என்றார். (ஐ)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 30.11.2019 இல் வெளியிடப்பெற்றது.